## பொருளாதாரச் செயலாற்றம், பிரச்சனைகள், கொள்கைகள்–1986

### அறிமுகம்

இலங்கையின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி 1986 இல் 4.3 சதவீதத்தினால் உயர்ந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 1985 இல் அடையப்பட்ட 5 சதவீதங்கொண்ட உண்மையான மொத்தத் தேசிய உற்பத்தி வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடத்தக்கது. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்திற்கு இடமளித்து நோக்குகையில் நிலையான (1982) விலைகளில் மொத்த தேசிய உற்பத்தி 4.5 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியினைவிட மொத்தத் தேசிய உற்பத்தி வளர்ச்சி வீதம் சிறிதளவு கூடுதலாக விளங்கியமைக்கு வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்தின் பேரில் ஏற்பட்ட வெளிப்பாய்ச்சல் முந்திய ஆண்டினைவிட 1986 இல் குறைவடைந்திருந்தமை காரணமாகும். இது இவ்வாண்டில் பன்னாட்டுச் சந்தைகளில் வட்டிவீதம் கீழ் நோக்கி அசைவுற்றமையினைத் தொடர்ந்து வெளிநாட்டுக்கடன்கள் மீதான வெளிநாட்டுக்கான வட்டிக்கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டமையின் விளைவாக ஏற்பட்டதாகும்.

அட்டவணை 1.1

தேசிய வருமான புள்ளி விபரங்கள் 1984 - 1986

DISCARDED

| விடயம் | தொகை (ப. இ. ரூபாய்களில்) | | | வளர்ச்சி வீதம் (%) | |
|---|---|---|---|---|---|
| | 1984(அ) | 1985(அ) | 1986 (அ) | 1985 | 1986 |
| 1. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொ. உ. உ. .. | 140,039 | 148,321 | 163,713 | 5.9 | 10.4 |
| 2. நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில் மொ. உ. உ. .. | 104,395 | 109,570 | 114,261 | 5.0 | 4.3 |
| 3. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொ. தே. உ. .. | 136,638 | 144,921 | 159,852 | 6.1 | 10.3 |
| 4. நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில் மொ. தே. உ. .. | 101,399 | 106,741 | 111,565 | 5.3 | 4.5 |
| 5. நடுவாண்டுக் குடித்தொகை ('000) ... | 15,599 | 15,837 | 16,117 | 1.5 | 1.8 |
| 6. தலைக்குரிய மொ. தே. உ. (ரூபாய்களில் | | | | | |
| (i) நடைமுறை விலைகளில் ... | 8,759 | 9,151 | 9,918 | 4.5 | 8.4 |
| (ii) நிலையான விலைகளில் ... | 6,500 | 6,740 | 6,922 | 3.7 | 2.7 |

(அ) தற்காலிகமானவை — மூலம்: இலங்கை மத்திய வங்கி.

நடைமுறைக் காரணிச் செலவு விலைகளிலான மொத்தத் தேசிய உற்பத்தி 1986 இல் ரூ. 15,990 கோடி ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது. பொருளாதாரத்தின் பொதுவான விலை மாற்றத்தினை அளவிடும் உள்ளடக்க மொத்தத் தேசிய உற்பத்திச் சுருக்கி 5.5 சதவீதத்தினால் உயர்வடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. சார்புரீதியில் இம்மாற்றத்தை மிதமானதாகக் கருதலாம். ஆனால் 1985 இல் ஏற்பட்ட 1.0 சதவீதங்கொண்ட சராசரி விலைமாற்றத்தின் குறைப்புடன் ஒப்பிடுகையில் இது கவனத்தை ஈர்ப்பதொன்றாக விளங்குகின்றது. பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தற்காலிக மதிப்பீடு


களின்படி இலங்கையின் குடித்தொகை 1986 இல் 1.8 சதவீதத்தினால் அதிகரித்து 161 இலட்சத்தினை அடைந்தது. இவ் அதிகரிப்பிற்கு இடமளித்தபின் நடைமுறை விலைகளிலான தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி 1986 இல் ரூ. 9,918 ஆக (ஐ.அ.டொலர் 354 ) உயர்வடைந்தது. உண்மை நியதிகளில் தலைக்குரிய வருமானம் முந்திய ஆண்டின் 3.7 சதவீத அதிகரிப்பிற்கு மாறாக 2.7 சதவீதத்தினால் அதிகரித்தது. 1986 இல் தலைக்குரிய உண்மையான வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி குடித்தொகை வளர்ச்சிவீதத்தில் ஏற்பட்ட சிறிதளவு வேகம், உண்மையான மொத்தத் தேசிய உற்பத்தியில் காணப்பட்ட குறைவான வளர்ச்சி ஆகிய இரு காரணிகளதும் விளைவாக ஏற்பட்டதாகும்.

பொருளாதார வளர்ச்சியின் பொதுவான வீதம் 1986 இல் ஓரளவு மிதமாக விளங்கியவேளையில் அது பொருளாதாரத்தின் பலதுறைகள் மீதான பலமான அமுக்கத்தின் மத்தியிலும் பேணப்பட்டது. இலங்கையின் குறைவடைந்து செல்லும் பொருளாதாரச் செயலாற்றமானது வேளாண்மைத்துறையிலேயே மிகவும் தெளிவாகக் காணப்பட்டது. காட்டுத்தொழிலையும் கடற்றொழிலையும் உள்ளடக்கிய இத்துறையில் 1986 இல் கூட்டிய பெறுமதி 2.6 சதவீதத்தினால் மட்டும் விரிவடைந்தது. இது முந்திய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மிகவும விரும்பத்தக்க வளர்ச்சி வீதமான 8.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் கணிசமான அளவு குறைவானதாகும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கம் பற்றிய ஆய்வு 1936 இல் பொருளாதார வளர்ச்சியின் முக்கிய மூலங்களாகத் தயாரிப்பு, அகழ்தலும் பார்க்குழித்தொழிலும், வர்த்தகம், பொதுநிருவாகம் என்பன விளங்கியமையைக் காட்டுகின்றது. 1985 இல் சார்பு ரீதியில் குறைவான வளர்ச்சியினைப் பதிவுசெய்த அகழ்தலும் பார்க்குழித்தொழிலும் துறை 1986 இல் திறமையாகச் செயலாற்றி 5.2 சதவீத வளர்ச்சி வீதத்தினைக் காட்டியது. எனினும் தயாரிப்புத்துறையே 1986 இல் மிகத்திறமையான வளர்ச்சிப் போக்கினைப் பேணியதுடன் இத்துறையின் வளர்ச்சிவீதம் 8.4 சதவீதமாக விளங்கியது. இவ் அதிகரிப்பில் அரசிற்குச் சொந்தமானதும், தனியார்துறையினதும் கைத்தொழில்கள் இரண்டும் பங்குகொண்டிருந்தன. விரைவுபடுத்தப்பட்ட மகாவலிச் செயற்றிட்டத்தின் கீழான முதன்மை வேலைகளில் பெரும்பாலானவை பூர்த்தியடைந்துவிட்டமையினால் 1986 இல் கட்டுமானத்துறை குறைவான வளர்ச்சியினைக் காட்டியது. மறுபுறம் அண்மை ஆண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு நிலையான பங்கினை வழங்கிவந்த பணிகள் துறை மீண்டும் முன்னேற்றத்தினைக் காட்டி 4.3 சதவீத வளர்ச்சிவீதத்தினைப் பதிவுசெய்தது.

எல்லாத்துறைகளும் 1986 இல் நேர்க்கணியமான வளர்ச்சியினைப் பதிவுசெய்த வேளையில் துணைத்துறைகளின் செயலாற்றத்தில் கணிசமான அளவு வேறுபாடுகள் காணப்பட்டன. உதாரணமாக 1986 இன் பொதுவான வளர்ச்சியில் முக்கியமாக பின்னடைவினைக் கொண்டிருந்த வேளாண்மைத்துறையினுள் முக்கியமான இரு பயிர்களான தேயிலையும் நெல்லும் வீழ்ச்சியினைக்காட்டின. இறப்பரின் கூட்டிய பெறுமதி மிகவும் சிறிதளவால் அதிகரித்தவேளையில் நெல்லின் கூட்டியபெறுமதி குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. எனினும் இத்துறையில் மிகவும் விரும்பத்தக்க வளர்ச்சியானது முக்கியமாக சிறு உணவுப்பயிர்களையும் சிறு ஏற்றுமதிப்பயிர்களையும் கரும்பினையும் உள்ளடக்கிய ஏனைய வேளாண்மையிலிருந்தே கிடைத்தது.

## மொத்தத் தேசிய உற்பத்தி




இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை 1.2

## மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சியும் உள்ளடக்கமும் 1984–1986 நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில்

| துறை | தொகை (ப. இ. ரூபாய்களில்) | | | வளர்ச்சி வீதம் | |
|---|---|---|---|---|---|
| | 1984(அ) | 1985(அ) | 1986(அ) | 1985 | 1986 |
| 1. வேளாண்மை, காட்டுத்தொழில், கடற்றொழில் ... | 26,113 | 28,366 | 29,106 | 8.6 | 2.6 |
| இதில்: ... ... | | | | | |
| 1.1 தேயிலை ... ... | 2,681 | 2,759 | 2,723 | 2.9 | – 1.3 |
| 1.2 இறப்பர் ... ... | 878 | 851 | 856 | – 3.1 | 0.6 |
| 1.3 தெங்கு ... .. | 2,513 | 3,828 | 3,935 | 52.3 | 2.8 |
| 1.4 நெல் ... ... | 6,166 | 6,783 | 6,613 | 10.0 | – 2.5 |
| 1.5 ஏனையவை (ஏனைய வேளாண்மை காட்டுத் தொழிலும் கடற்றொழிலும் ) ... | 13,875 | 14,145 | 14,979 | 1.9 | 5.9 |
| 2. சுரங்கம் அகழ்தலும், கல் உடைத்தலும் .. | 2,449 | 2,486 | 2,615 | 1.5 | 5.2 |
| 3. தயாரிப்புத் தொழில் ... .. | 15,390 | 16,193 | 17,558 | 5.2 | 8.4 |
| 3.1 மரப்பயிர் பதனிடல் ... .. | 2,983 | 3,222 | 3,225 | 8.0 | 0.1 |
| 3.2 ஏனையவை ... ... | 12,407 | 12,971 | 14,333 | 4.5 | 10.5 |
| 4. கட்டடவாக்கம் ... ... | 8,030 | 8,070 | 8,191 | 0.5 | 1.5 |
| 5. பணிகள் ... ... | 52,413 | 54,455 | 56,791 | 3.9 | 4.3 |
| 6. மொத்த உள்நாட்டு உற்பத்தி ... ... | 104,395 | 109,570 | 114,261 | 5.0 | 4.3 |
| 7. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம்... | –2,996 | –2,829 | –2,696 | — | — |
| 8. மொத்தத் தேசிய உற்பத்தி ... ... | 101,399 | 106.741 | 111,565 | 5.3 | 4.5 |


(அ) தற்காலிகமானவை. மூலம்: இலங்கை மத்திய வங்கி.

தயாரிப்புத்துறையில், வேளாண்மைச் செய்முறைப்படுத்தல் கைத்தொழில்களின் கூட்டியபெறுமதி பெருந்தோட்டத்துறையின் குறைவான வெளியீட்டு வளர்ச்சி காரணமாக மிகவும் நேக்கமடைந்திருந்தது. இதன் விளைவாக இத்துறையின் முழுவளர்ச்சியும் தொழிற்சாலைக்கைத்தொழில்கள் துணைத்துறையில் பிரதிபலிக்கப்பட்டது. இத்துறையினுள் மிகவும் துலாம்பரமான வளர்ச்சி தனியார் துறையில் ஏற்பட்டு இதன்வெளியீடு 15 சதவீதத்தினுல் அதிகரித்தது. ஒப்பிடுகையில் அரசிற்குச் சொந்தமான கைத்தொழில்கள் 7.6 சதவீதத்தினுல் அதிகரித்தன.

பணிகள்துறையில் மின்வலு, வாயு, நீர், நலத்துறைப்பணிகள் என்பனவற்றின் கூட்டிய பெறுமதி 7.1 சதவீதத்தினுல் அதிகரித்தது. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல்துறை 1986 இல் 3.2 சதவீதத்தினுல் அதிகரித்தவேளையில் மொத்த, சில்லறை வர்த்தகத்தின் கூட்டியபெறுமதி 4.0 சதவீதத்தினுல் அதிகரித்தது. பின்னையதைப்பொறுத்தவரை ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தின் கூட்டியபெறுமதி மிகவும் சிறிதளவால் மட்டும் அதிகரித்திருக்கையில் அதிகரிப்பில் பெரும்பகுதி உள்நாட்டு வர்த்தகத்தில் பிரதிபலிக்கப்பட்டது. வங்கித்தொழில், காப்புறுதி, மெய்ச்சொத்து என்பனவற்றின் கூட்டியபெறுமதியில் ஏற்பட்ட வளர்ச்சிவீதம் 4.0 சதவீதமாக அமைந்து முந்திய ஆண்டின் 9.9. சதவீத வளர்ச்சியினைவிட 1986 இல் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. எனினும் பணிகள் துறையிலான கூட்டிய பெறுமதியில் மிகவும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி

## கைத்தொழில் மூலங்களின்படியான மொத்த உள்நாட்டு உற்பத்தி

நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில்




இலங்கை மத்திய வங்கி

19 சதவீத வளர்ச்சிவீதத்தினைப் பதிவுசெய்த பொதுநிருவாகம், பாதுகாப்பு என்பனவற்றிலிருந்து வந்தது. பெரும்பாலும் குறைவான சுற்றுலா வருகையின் காரணமாக ஏனைய பணிகள்துறை 1986 இல் தொடர்ந்தும் எதிர்க்கணியமான கூட்டிய பெறுமதியினைப் பதிவுசெய்தது.

1986 இல் மூலதன ஆக்கத்தின் வீதத்தில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் காணப்பட்டது. இருப்புக்களின் மாற்றங்களை உள்ளடக்கிய மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் முந்திய ஆண்டில் ஏற்பட்ட 2.6 சதவீத வீழ்ச்சிக்கு மாறாக 1986 இல் 9.8 சதவீதத்தினால் அதிகரித்தது. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கத்தில் ஏற்பட்ட மிகவும் குறிப்பிடத்தக்க மாற்றம் அரசதுறையில் ஏற்பட்டது. இது 1985 இன் 11.0 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1986 இல் 23.0 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. தனியார்துறையிலும் அரச கூட்டுத்தாபனங்களிலும் மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் முந்திய ஆண்டின் 5.5 சதவீத வீழ்ச்சிக்கு மாறாக 6.4 சதவீதத்தினால் அதிகரித்தது. சந்தைவிலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாசாரமாக நோக்குகையில் மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் கடந்த இரு ஆண்டு காலப்பகுதியில் 23.7 சதவீதமாக நிலைத்திருந்தது.

முன்பு குறிப்பிடப்பட்டதுபோன்று 1986 இல் மிகவும் விரும்பத்தக்க வளர்ச்சி கைத்தொழில்துறையில் ஏற்பட்டது. வேளாண்மைத்துறையின் செயலாற்றம் கலந்து காணப்பட்டது. தெங்கு உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பும், இறப்பர் வெளியீட்டில் சிறிதளவு விரிவாக்கமும் காணப்பட்ட வேளையில் பெறுமதி ரீதியில் மிக முக்கிய பண்டங்களான தேயிலை, நெல் என்பனவற்றின் உற்பத்தி பின்னடைவினைக்கொண்டிருந்தது. சிறு ஏற்றுமதிப்பயிர்கள், சிறு உணவுப்பயிர்கள் என்பனவற்றின் செயலாற்றம் திருப்திகரமாக விளங்கியவேளையில் சீனியின் உற்பத்தியும் கணிசமான அதிகரிப்பைப் பதிவுசெய்தது.

மந்தமடைந்த விலைகள், பாதகமான காலநிலை நிலைமைகள் என்பவற்றின் விளைவாக குறிப்பாக உயர், மத்தியநில பிரதேசங்களில் வளமாக்கிப்பயன்பாடு குறைக்கப்பட்டமையினால் தேயிலை உற்பத்தி 1986 இல் 2,113 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 1 சதவீதத்தினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. இக்குறைப்பு முக்கியமாக அரசிற்குச் சொந்தமான பெருந்தோட்டங்களில் பிரதிபலிக்கப்பட்டது. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச்சபைகளினதும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களினதும் ஒன்றுசேர்ந்த வெளியீடு 1986 இல் 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இரு கூட்டுத்தாபனங்களினதும் வாங்கப்பட்ட இலையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தேயிலை உற்பத்தி இவ்வாண்டில் வீழ்ச்சியைப் பதிவுசெய்து சிறு உடைமையாளர்துறையினைக் கூட, மந்தமடைந்த விலைகள் எவ்வாறு பாதித்தன என்பதனைத் தெளிவுபடுத்தியது.

தேயிலைக்கு மாறாக இறப்பர் உற்பத்தி 1986 இல் 10 இலட்சம் கிலோக்கிறாம்களினால் சிறிதளவு அதிகரித்து 1,385 இலட்சம் கிலோக்கிறாம்களாக விளங்கியது. இது முற்றாக இத்துறையின் அதிகரித்த வளமாக்கிப் பயன்பாட்டின் காரணமாக எக்டேயர் ஒன்றுக்கான மதிப்பிடப்பட்ட சாரசரி விளைவு 830 கிலோக்கிறாம்களாக அதிகரித்தமையினால் ஏற்பட்டதாகும். அரசதுறையின் மொத்த இறப்பர் உற்பத்தியில் ஏறக்குறைய 55 சதவீதத்திற்கு வகைகூறும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பெருந்தோட்டங்களே வெளியீட்டில் ஏற்பட்ட முழு அதிகரிப்பிற்கும் பொறுப்பாக

விருந்தன. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச்சபைகளினல் முகாமைப்படுத்தப்பட்ட பெருந்தோட்டங்களின் இறப்பர் உற்பத்தி சிறிதளவால் வீழ்ச்சியடைந்த வேளையில் சிறு உடமைகளையும் உள்ளடக்கிய தனியார்துறைப் பெருந்தோட்டங்களின் வெளியீடு முந்திய ஆண்டினைப் போன்று பெரும்பாலும் மாற்றமின்றி அதே அளவாக விளங்கியது.

1986 இன் தெங்கு உற்பத்தி முந்திய ஆண்டின் மட்டத்தினைவிட 3 சதவீதத்தினல் அதிகரித்து இதுவரை பதிவுசெய்யப்பட்டதில் மிக உயர்ந்த அளவான 30,410 இலட்சம் காய்களாக விளங்கியது. தெங்கு வெளியீட்டில் ஏற்பட்ட தொடர்ச்சியான அதிகரிப்பு பெரும்பாலும் தெங்கு வளரும் பிரதேசங்களில் நிலவிய சாதகமான காலநிலை நிலைமைகளினலும், அண்மை ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்ட அதிகரித்த வளமாக்கிப் பாவனையின் காலம் தாழ்ந்த விளைவினலும் ஏற்பட்டதாகும்.

எனினும், பன்னட்டுச்சந்தையில் தெங்குப் பொருட்களுக்கான எதிர்காலம் 1986 இன் பெரும்பகுதியிலும் தொடர்ந்தும் மந்தமாகவே இருந்தது. இது முக்கியமாக தெங்கு உற்பத்தி நாடுகளிலிருந்து ஏற்பட்ட அதிகரித்த நிரம்பலினலும் போட்டித்தன்மைகொண்ட எண்ணெய், கொழுப்புக்கள் கிடைக்கத்தக்கதாயிருந்தமையினலும் ஏற்பட்டதாகும். 1986 இன் முதல் இரு காலாண்டுப் பகுதியில் அதிகமான தெங்குப்பொருட்களின் சராசரி க. ஏ. பெ. விலை பெரும்பாலும் முந்திய ஆண்டில் நிலவிய அவற்றின் விலைகளின் அரைப்பங்காகவே விளங்கியது. விலைகளில் ஏற்பட்ட உறுதியான வீழ்ச்சி மூன்றும் காலாண்டுப் பகுதியிலும் நன்கு தொடர்ந்து விளங்கியது. ஆனலும் அதன் பின்னர் பிலிப்பைன்சில் நிலவிய உறுதியற்ற அரசியல் நிலைமை, ஏனைய முக்கிய உற்பத்தியாளர்களின் நிரம்பலில் ஏற்பட்ட பற்ருக்குறை என்பவற்றின் காரணமாக விலைகள் உயர்வடையத் தொடங்கின.

நெல் உற்பத்தி இதுவரையில் அடையப்பட்ட மிக உயர்ந்த மட்டத்தைக் கொண்டிருந்த சென்ற ஆண்டினைவிட 1986 இல் 2.5 சதவீதத்தினல் வீழ்ச்சியடைந்து 2,595,000 மெற்றிக் தொன்களை அடைந்தது. உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கியமாகப் பெரும்போகத்தில் பிரதிபலிக்கப்பட்டது. 1985/86 பெரும்போகத்தில் நெல் உற்பத்தி 17 இலட்சம் மெற்றிக் தொன்களாக விளங்கி 1984/85 இனைவிட 3.6 சதவீதம் குறைவாக விளங்கிய வேளையில் சிறுபோக உற்பத்தி 9 இலட்சம் மெற்றிக் தொன்களாக விளங்கி முந்திய ஆண்டினைப் போன்று பெரும்பாலும் அதே மட்டத்திலேயே இருந்தது.

1986 இல் நெல் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி முழுவதும் பெரும்பாலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நெல் விளையும் மாவட்டங்களில் பிரதிபலிக்கப்பட்டது. பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 20 சதவீதத்தினல் வீழ்ச்சியடைந்தமை, அதிக அளவிலான பயிர் அழிவுகள், குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தின் நெல் உற்பத்தியைப் பாதித்த கந்தளாய் அணைக்கட்டு உடைப்பு என்பன இப்பிரதேசங்களின் குறைவான வெளியீட்டுக்கான முக்கிய காரணங்களில் சிலவாகும். எனினும் இப் பிரதேசங்களில் பெரும்போகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி ஏனைய பிரதேசங்களின் உற்பத்தியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினல் ஓரளவு எதிரீடு செய்யப்பட்டது. பயிரிடப்பட்ட நிலப்பரப்பின் அளவும் வளமாக்கிப்பாவனையும் அதிகரித்த போதிலும் சிறுபோக உற்பத்தி முந்திய சிறுபோகத்தில் நிலவிய அதே மட்டத்திலேயே தொடர்ந்தும் விளங்கியது. இது ஆண்டின் பிற்பகுதியில் நிலவிய பாதகமான காலநிலை நிலைமைகளினல் சராசரி விளைச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக ஏற்பட்டதாகும்.

செவனகல, பெல்வத்த தொழிற்சாலைகள் உற்பத்தியில் ஈடுபடத் தொடங்கியதுடன் 1986 இல் சீனி உற்பத்தி 94 சதவீதத்தால் அதிகரித்து 34,391 மெற்றிக் தொன்களாக விளங்கியது. சீனிக்கூட்டுத்தாபனத்தின் செவனகலத் தொழிற்சாலை 6,533 மெற்றிக் தொன்களை உற்பத்தி செய்தவேளையில் பெல்வத்த சீனிக்கூட்டு நிலையத்தின் வெளியீடு 13,116 மெற்றிக் தொன்களாக விளங்கியது.

சிறு உணவுப்பயிர்த்துறை 1986 இல் சிறிதளவு முன்னேற்றத்தினைக்காட்டியது. சோயா அவரை, சின்னவெங்காயம், சோளம், தட்டைப்பயறு, நிலக்கடலை, எள்ளு, பயறு, செத்தல் மிளகாய் போன்ற பெருந்தொகையான பயிர்களின் அதிகரித்த வெளியீடு பெரும்பாலும் இப்பயிர்களின் பயிர்ச் செய்கையின் கீழான நிலப்பரப்பு குறிப்பாக மகாவலி குடியேற்றப் பிரதேசங்களில் அதிக அளவில் விரிவுபடுத்தப்பட்டமையினால் ஏற்பட்டதாகும்.

அண்மை ஆண்டுகளில் கடுமையான பின்னடைவினைக் கொண்டிருந்த மீன்உற்பத்தி 1986 இல் 6 சதவீதம்கொண்ட மிதமான அதிகரிப்பைப் பதிவுசெய்தது. இதன்வெளியீடு 183,056 மெற்றிக் தொன்களாக உயர்வடைந்தது. இது வடமேற்கு, வடகிழக்குப் பிரதேசங்களிலிருந்து மேற்கு, கிழக்குக் கரையோர பிரதேசங்களுக்கு மீன்பிடியாளர் குடிபெயர்ந்தமை காரணமாக இப்பிரதேசங்களில் கடற்றொழில் நடவடிக்கைகள் செறிவுபடுத்தப்பட்டமையினையும் உள்நாட்டு மீன்பிடித் தொழில்துறையின் விரிவாக்கத்தினையும் பிரதிபலிக்கின்றது. பால் உற்பத்தி 1,780 இலட்சம் இலிற்றர்களாக மதிப்பிடப்பட்டு 1985 இன் மட்டத்தினைவிட ஏறக்குறைய 2 சதவீதம் குறைவாக விளங்கியவேளையில் முட்டை உற்பத்தி 8 சதவீதத்தினால் அதிகரித்து 6,670 இலட்சமாக விளங்கியதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

1986 இல் கைத்தொழில்துறை குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைக்காட்டியது. உண்மை நியதிகளில் கைத்தொழில் வெளியீடு 1985 இன் 5 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 1986இல் 12 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1986 இல் கைத்தொழில்துறையில் ஏற்பட்ட முன்னேற்றமான செயலாற்றம் தனியார் துறைக்கைத்தொழில்கள், அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகள் ஆகிய இரண்டும் தொடர்ந்து விரிவடைந்தமையினால் ஏற்பட்டதாகும். தனியார்துறைக் கைத்தொழில்களின் வெளியீட்டுப்பெறுமதி 15 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் அரசதுறைக் கைத்தொழில்களின் பெறுமதி 8 சதவீதத்தினால் அதிகரித்தது.1986 இல் உற்பத்தியில் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த கைத்தொழில் துணைத்துறைகளாக அடிப்படை உலோக உற்பத்திகள், புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள், உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள், உணவும் குடிவகைகளும் புகையிலை உற்பத்திகளும், இரசாயனங்கள், பெற்றோலியம், பிளாத்திக்கு உற்பத்திகள், தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகள், தாளும் தாள் உற்பத்திகளும் என்பன விளங்கின.

தனியார்துறையில் புடவைகளும் அணியும் ஆடைகளும், உணவு குடிவகைகள், புகையிலை, இரசாயனங்கள் என்பனவற்றின் வெளியீட்டில் பெருமளவு அதிகரிப்புக்கள் காணப்பட்டன. புடவைகள் அணியும் ஆடைகள் என்பவற்றின் அதிகரித்த உற்பத்தி பெரும்பாலும் ஏற்றுமதிச்சந்தைகளிலிருந்து வந்த அதிகரித்த கேள்வியினை ஈடுசெய்யும் பொருட்டு ஏற்பட்டது. தனியார்துறையினை விட ஐயத்திற்கு இடமின்றி குறைந்த முக்கியத்துவத்தினைக் கொண்டிருந்த அரசதுறைக் கைத்தொழில்களின் முன்னேற்றமான செயலாற்றமானது பெருந்தொகையான கூட்டுத்தாபனங்களினால் எதிர்நோக்கப்பட்ட கடுமையான உற்

பத்திப் பிரச்சனைகளின் பின்னணியில் நோக்கப்படவேண்டும். பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம், அரச மரக்கூட்டுத்தாபனம், இலங்கை கனிப்பொருள், மணல் கூட்டுத்தாபனம் என்பனவற்றின் தொழிற்பாடுகள் அரசியல் குழப்பங்களினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

அரசதுறைக் கைத்தொழில் கூட்டுத்தாபனங்களின் முன்னேற்றமான செயலாற்றத்தினை விளக்குவதாக இவ்வாண்டில் அரச கைத்தொழில் முயற்சிகளுக்கான அரசின் மாற்றல் கொடுப்பனவுகள் மேலும் வீழ்ச்சியுற்றன. இத்தகைய மாற்றல்கள் முந்திய ஆண்டின் ரூ. 6,860 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1986 இல் ரூ. 2,650 இலட்சமாக மட்டும் அமைந்தன. 1986 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட மாற்றல்களில் ரூ. 1,950 இலட்சம் அல்லது 74 சதவீதம் மூலதன மாற்றல்களையும் ரூ. 700 இலட்சம் அல்லது 26 சதவீதம் நடைமுறை மாற்றல்களையும் கொண்டிருந்தன. முந்திய ஆண்டினைப் போன்று இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனம் 1986 இல் அரசின் மாற்றல்களைப்பெற்ற முக்கிய பெறுநராக விளங்கியது.

1986 இல் வலுத்துறையின் அபிவிருத்திகள் மிகவும் சாதகமாக அமைந்தன. பெற்றோலிய இறக்குமதி விலைகள் கடுமையாகக் குறைக்கப்பட்டமை, நீர்மின்வலு இயலளவு முழுமையாகப் பயன்படுத்தப்பட்டமை என்பன வலுவிற்கு வெளிநாட்டு மூலங்களில் தங்கியிருத்தலைக் குறைந்தளவு சுமையுடையதாக்கின. பெற்றோலிய இறக்குமதிச் செலவு சிஎஉ நியதிகளில் 52 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தவேளையில் மொத்த இறக்குமதிகளில் அதன்பங்கு 1985 இன் 21 சதவீதத்திலிருந்து 1986 இல் 11 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பன்னாட்டு விலைகளில் வீழ்ச்சியும், வலுவை உருவாக்குவதற்கு மிகவும் சாதகமான காலநிலையும் காணப்பட்டபோதிலும் வலுவின் மேலதிகமான இறக்குமதிகளை ஊக்கமிழக்கச் செய்யும் கொள்கைக்கு ஏற்ப வலுவின் உள்நாட்டு விலைகள் பெரும்பாலும் மாற்றமின்றிப் பேணப்பட்டன.

1986 இல் நுகர்வோர் விலைகளின் அதிகரிப்பினால் அளவிடப்பட்டவாறான பணவீக்க வீதம் முந்திய ஆண்டினைவிடக் குறிப்பிடத்தக்க அளவு கூடியதாகும். கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் 1986 இல் 8 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. இது 1985 இல் ஏற்பட்ட அதன் 1.5 சதவீத குறைப்பிலிருந்து ஒரு குறிப்பிடத்தக்க பாய்ச்சலினைப் பிரதிபலிக்கின்றது. புள்ளிக்குப்புள்ளி என்ற அடிப்படையிலும் அதாவது 1985 திசெம்பரைவிட 1986 திசெம்பரில் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பு வீதம் 9 சதவீதமாக விளங்கியது. முந்திய ஆண்டில் இது தொடர்பான அதிகரிப்பு 1.5 சதவீதமாக விளங்கியது. எனினும் 1986 இன் பணவீக்கவீதம் இரட்டை எண்களில் அமைந்த வீதங்களைப் பதிவுசெய்த 1978- 1984 காலப்பகுதியில் நிலவிய வீதங்களை விடக் கணிசமான அளவு குறைவானதாகும்.

1986 இன் நுகர்வோர் விலைகளின் அதிகரிப்பிற்குப் பல காரணிகள் உதவின. அவற்றில் மிக முக்கியமானவை உற்பத்தியைப் பாதித்த காலநிலை நிலைமைகள், நிரம்பலில் தடைகளை ஏற்படுத்தும் வகையில் சில பிரதேசங்களில் ஏற்பட்ட போக்குவரத்து வசதிகளின் தடைகள், 1986 இறுதி மாதங்களில் தெங்கு, தெங்குப்பொருட்கள், என்பனவற்றின் விலைகளில் காணப்பட்ட வீழ்ச்சியடைந்துசெல்லும் போக்கு மாற்றமடைந்தமை என்பனவாகும். இவற்றுடன் நெல்லுக்கான உயர்வான, உத்தரவாதவிலை இறக்குமதி செய்யப்பட்ட புடவைகள் மீது தீர்வை விதிக்கப்பட்டமை, புகையிலை, மதுவகை என்பன மீதான கலால்வரி

அதிகரிப்பு, உயர்வான அஞ்சல் கட்டணவீதங்கள் போன்ற 1985 நவெம்பரில் புகுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட வழிமுறைகளின் முழுமையான தாக்கமும் 1986 இல் உணரப்பட்டது. உள்நாட்டு நாணயத்தின் நியதிகளில் இறக்குமதி விலைகளை உயர்த்திய பெரும்பாலான வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிரான செலவாணி வீதத்தேய்வு மேலும் ஒரு காரணியாக விளங்கியது. எனினும் இவ்வாண்டில் எரிபொருள், வலு என்பனவற்றின் விலைகள் உறுதியாக இருந்தமை பணவீக்கத்தினை ஒரு அளவுக்குக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க உதவியது. மத்தியவங்கியினால் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்ட கடுமையான நாணயக் கொள்கையுடன் கேள்விப் பக்கத்திலிருந்து அந்த அளவுக்குக் குறைவான தாக்கம் காணப்பட்டதுடன் இவ்வாண்டில் வங்கியின் முக்கிய நடவடிக்கையாக மேலதிக திரவத்தன்மையை இல்லாமல் செய்யும் பொருட்டு திறந்த சந்தைத் தொழிற்பாட்டில் வங்கி ஈடுபட்டமை அமைந்தது.

நுகர்வோர் விலைகளில் ஏற்பட்ட மேல் நோக்கிய அசைவிற்கு மாறாக மொத்த விற்பனை விலைச்சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறான உற்பத்தியாளர்கள் விலைகள் 1985 இல் பதிவு செய்யப்பட்ட 15.2 சதவீதமான மிகவும் கணிசமான வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1986 இல் 2.9 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்றன. இது மொத்த விற்பனை விலைச்சுட்டெண்ணில் முக்கிய ஏற்றுமதிப்பொருட்கள் அதிக பங்கினை வகித்தமையினால் அவற்றின் விலை அசைவுகள் இச்சுட்டெண்ணின் போக்கில் செல்வாக்கினை செலுத்தியமை காரணமாக ஏற்பட்டதாகும். ஏற்றுமதி விலைகள் 1986 இல் 17.8 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்றன. எனினும் இது முந்திய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 38.7 சதவீதங்கொண்ட கணிசமான வீழ்ச்சியை விடக் குறைவானதாகும். எனினும் புள்ளிக்குப்புள்ளி என்ற அடிப்படையில் அதாவது 1985 திசெம்பரைவிட 1986 திசெம்பரில் சுட்டெண் 12.7 சதவீதத்தினால் அதிகரித்து 1986 இன் பிற்பகுதியில் ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட மாற்றத்தினைப் பிரதிபலித்தது.

கூலி நிர்ணயச்சபையினால் உள்ளடக்கப்பட்ட வர்த்தகங்களில் உள்ள எல்லா ஊழியர்களினதும் பெயரளவிலான கூலிகள் அவர்களது ஆகக்குறைந்த கூலி வீதச்சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறு முந்திய ஆண்டின் 8.3 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1986 இல் 5.4 சதவீதத்தினால் அதிகரித்தன. எனினும் விலைகளின் அதிகரிப்பு வீதத்தில் சிறிதளவு வேகம் காணப்பட்ட பின்னணியில் இவ்வாண்டில் உண்மைக்கூலிகள் 2.4 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்றன. வேளாண்மையிலுள்ள வேலையாட்கள் 5.3 சதவீதமான பெயரளவிலான கூலி அதிகரிப்பைப் பெற்றவேளையில் அவர்களது உண்மைக்கூலிகள் 2.4 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்றன. பெயரளவிலான கூலிகளில் ஏற்பட்ட ஆகக்கூடிய அதிகரிப்பு கைத்தொழில் வர்த்தகத்திலுள்ள வேலையாட்களைப் பொறுத்தவரையில் ஏற்பட்டது. இது முந்திய ஆண்டின் 11.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 10.0 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

நன்கமைந்ததுறையின் கூலிகளின் அமைப்பில் 1986 இல் ஏற்பட்ட முக்கியமான முன்னேற்றம் பாடசாலை ஆசிரியர்கள் நீங்கலான எல்லா அரச ஊழியர்களதும் சம்பளங்கள் மீளஅமைக்கப்பட்டமையாகும். இதன் முக்கிய நோக்கம் ஊழியர்கள் ஆகக்கூடிய சம்பள அளவில் தேக்கமுறுவதனை இல்லாமல் செய்வதாகும். புதிய அமைப்பின் குறிப்பிடத்தக்க அம்சம் முன்பு நிலவிய சம்பளத் திட்டங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டமையாகும்.

நாட்டின் பொதுவான தொழில்வாய்ப்பு நிலைபற்றிய தகவல் மிகவும் அரிதாகக் காணப்படுகின்றது. கிடைக்கத்தக்கதாகவுள்ள மதிப்பீடுகளின்படி 1986 இல் அரசதுறையில் தொழில்வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. ஆனால் அரசுசார் துறையில் வீழ்ச்சியடைந்துள்ளன. அரசதுறையின் தொழில்வாய்ப்பு 1985 இன் 1.5 சதவீதமான மதிப்பிடப்பட்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1986 இல் 2.0 சதவீதத்தினால் அதிரித்துள்ளதாகத் தற்காலிக மதிப்பீடுகள் காட்டுகின்றன. தொழில் வாய்ப்புக்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்ட விடயங்களாக கல்வி, நலத்துறை, உள்நாட்டு வைத்தியம், பாதுகாப்புப் பணிகள், பொதுநிருவாகம், சமூகப்பணிகள் என்பன விளங்கின.

1985 இல் காணப்பட்ட அதே போக்கினைத் தொடர்ந்து 1986 இல் அரசுசார் துறையின் தொழில்வாய்ப்பு வீழ்ச்சியினைப் பதிவுசெய்தது. நிதித்தேவைகளுக்குச் சுயமாக தங்கியிருக்கும் கொள்கையானது அதிகமான கூட்டுத்தாபனங்களைத் தொழில்வாய்ப்பினைப் பொறுத்தவரை கடுமையான கொள்கைகளைப் பின்பற்றச்செய்தது. இத்துறையின் தொழில்வாய்ப்பு 1985 இல் ஏற்பட்ட 2.4 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1986 இல் 7.0 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்றது. தொழில்வாய்ப்பில் கணிசமான வீழ்ச்சிகள் பொறியியல், பயணிகள் போக்குவரத்து, புடவை நெசவு, கனிப்பொருள் மணல், சீமெந்து உற்பத்திகள் என்பவற்றில் ஈடுபடும் அரசுசார் நிறுவனங்களில் அவதானிக்கப்பட்டது. அரச பெருந்தோட்டங்களின் தொழில்வாய்ப்பும் ஏறக்குறைய 9.0 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது.

மத்தியவங்கியின் வர்த்தக நடவடிக்கைகளும் திட்டமிடப்பட்ட முதலீடுகளும் என்ற அளவீட்டின்படி தனியார்துறைக் கூட்டுநிலையங்களின் தொழில்வாய்ப்பு முந்திய ஆண்டினைவிட 1985/86 இல் 15 சதவீதத்தினால் அதிகரித்தது. கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவின்கீழ் வரும் தொழில் முயற்சிகளின் தொழில்வாய்ப்பு 1986 இல் 26 சதவீதத்தினால் அதிகரித்தது.

உலக ரீதியான பொருளாதார அமைப்பு மந்தமடைந்துள்ள நிலையில் இரண்டாவது ஆண்டாகத் தொடர்ந்து 1986 இலும் வெளிநாட்டு வர்த்தகத் துறையில் சாதகமற்ற போக்குகள் காணப்பட்டன. பெரும்பாலும் வேளாண்மைப் பொருட்களின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி காரணமாக ஏற்றுமதிகளின் மொத்தப்பெறுமதி இவ்வாண்டில் 21 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. எனினும் இறக்குமதிகள் மீதான செலவும் 15 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதற்கான முக்கிய காரணிகள் பன்னாட்டுச் சந்தைகளில் மசகு எண்ணெயின் விலையில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியும், பொருட்களுக்கான மந்தமடைந்த விலைகளும் ஆகும். இதனால் ஏற்பட்ட இறக்குமதி மிகை 1985 இன் மிகையினைவிடச் சிறிதளவு குறைவானதாயினும் வெளிநாட்டுக் கொடுப்பனவுகள் மீதான தொடர்ச்சியான தாக்கத்தினை ஈடுசெய்வதற்குப் போதுமானதாக இருந்தது.

பன்னாட்டுச் சந்தைகளில் ஏற்பட்ட விலை அசைவுகள் 1986 இல் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தில் கலந்துபட்ட நன்மைகளைக் கொண்டுவந்தன. கைத்தொழில் நாடுகளில் ஏற்பட்ட மீள்எழுச்சி வேளாண்மைப் பொருட்களுக்கான பலமான கேள்வியின் வடியில் அபிவிருத்தியடையும் நாடுகளை எட்டாமல்போனமை இலங்கைக்கு துரதிர்ஸ்டவசமானதொன்றாகும். இதனால் எல்லா வேளாண்மைப் பொருட்களினதும் சராசரி ஏற்றுமதி விலைகள் முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில்

1986 இல் குறைவாக விளங்கின. இறக்குமதிப் பக்கத்தில் பெற்றோலிய விலைகள் கணிசமாக வீழ்ச்சியடைந்து பெருந்தொகையான அடிப்படை உணவு விடயங்களின் விலைகளும் வீழ்ச்சியடைந்தபோதிலும் இவற்றினால் ஏற்பட்ட சாதகமான விளைவு நாட்டின் வர்த்தகமாற்று வீதத்தில் காணப்படும் தற்போதைய பாதகமான நிலைமையினைத் தவிர்ப்பதற்குப் போதுமானதாக இருக்கவில்லை. மத்திய வங்கியின் வர்த்தகச் சுட்டெண்களினால் அளவிடப்பட்டவாறு 1986 இல் ஏற்றுமதி விலைகள் 11 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தவேளையில் இறக்குமதி விலைகள் 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. விலைகளில் ஏற்பட்ட சார்புரீதியான அசைவுகள் வர்த்தக மாற்று வீதத்தில் 5 சதவீத வீழ்ச்சியினை ஏற்படுத்தி இறக்குமதி இயலளவினை மேலும் குறைவடையச் செய்வதற்கு ஏதுவாயின. இது 1985 இல் அனுபவிக்கப்பட்ட 20 சதவீதங்கொண்ட வீழ்ச்சிக்கு மேலாக ஏற்பட்டதுடன் பன்னாட்டு வர்த்தகத்தின் நிலையற்ற தன்மைக்கு ஏற்ப பொருளாதாரம் மாற்றமுறும் தன்மையினையும் விளக்குகின்றது.

சீராக்கப்பட்ட தரவுகளின்படி ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த மொத்த வரவுகள் 1985 இன் ரூ. 362,070 இலட்சத்துடன் (சிஎஉ 13,110 இலட்சம்) ஒப்பிடுகையில் 1986 இல் ரூ. 340,720 இலட்சமாக (சிஎஉ 10,360 இலட்சம்) அமைந்து ரூபா நியதிகளில் 6 சதவீத வீழ்ச்சியையும் சிஎஉ நியதிகளில் 21 சதவீத வீழ்ச்சியையும் காட்டியது. ஏற்றுமதியின் பெறுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டமை இது இரண்டாவது தொடர்ச்சியான ஆண்டாகும். 1984 உடன் ஒப்பிடுகையில் 1985 இன் வீழ்ச்சி ரூபா நியதிகளில் 3 சதவீதமாகவும் சிஎஉ நியதிகளில் 8 சதவீதமாகவும் விளங்கியது. 1986 இல் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கியமாக 1985 இல் ரூ. 190,260 இலட்சத்தில் (சிஎஉ 6,890 இலட்சம்) இருந்து 1986 இல் ரூ. 157,640 இலட்சத்திற்கு (சிஎஉ 4,790 இலட்சம்) வீழ்ச்சியடைந்த, வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த குறைவான வருவாய்கள் காரணமாக ஏற்பட்டது. 1985/86 இல் பன்னாட்டுச் சந்தைகளில் இலங்கையின் வேளாண்மைப் பொருட்களின் ஏற்றுமதிக்கான கேள்வியில் பொதுவான வீழ்ச்சிகாணப்பட்டது. 1985 இன் ஏற்றுமதிப் பெறுமதிகளின் மட்டங்களிலிருந்து தேயிலை ஏற்றுமதிகளின் பெறுமதி 23 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தவேளையில் (சிஎஉ நியதிகளில் 35 சதவீதம்) தெங்கு 23 சதவீதத்தினால் (சிஎஉ நியதிகளில் 35 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. இறப்பர், சிறுவேளாண்மை உற்பத்திகள் என்பவற்றிலிருந்து கிடைத்த வருவாய்கள் ரூபா நியதிகளில் சிறிதளவு அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தபோதிலும் சிஎஉ நியதிகளில் இவ்வரவுகள் முறையே 14 சதவீதத்தினாலும் 8 சதவீதத்தினாலும் வீழ்ச்சியுற்றன. ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பொறுப்பான முக்கிய காரணியாகப் பன்னாட்டுச் சந்தைகளில் வேளாண்மைப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சி அமைந்தது. தேயிலையின் சராசரி ஏற்றுமதிவிலை 1985 இன் கிலோக்கிராம் ஒன்றுக்கான ரூ. 60.62 (சிஎஉ 2.19) இலிருந்து 1986 இல் கிலோக்கிராம் ஒன்றுக்கு ரூ. 44.52 இற்கு (சிஎஉ 1.35) வீழ்ச்சியடைந்தது. இறப்பரைப் பொறுத்தவரை சராசரி கஏபெ விலை 1985 இன் கிலோக்கிராம் ஒன்றுக்கு சிஎஉ 0.77 இலிருந்து 1986 இல் கிலோக்கிராம் ஒன்றுக்கு சிஎஉ 0.72 ஆக 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. விலை அமைப்பில் காணப்பட்ட மந்த நிலையை இன்னும் கூட்டுவதாக தேங்காயெண்ணெய், உலர்த்திய தேங்காய், தேங்காய்த் துருவல் ஆகிய மூன்று முக்கிய தெங்கு உற்பத்திகள் அனைத்தினதும் (கஏபெ) விலைகளிலும் கணிசமான வீழ்ச்சி காணப்பட்டது.

1986 இல் கைத்தொழில்த்துறையின் ஏற்றுமதிகள் ரூபா நியதிகளில் 11 சத வீதத்தினுல் அதிகரித்தன. ஆனுல் சிஎஉ நியதிகளில் 7 சதவீதத்தினுல் வீழ்ச்சி யுற்றன. கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதி 1985 இன் ரூ. 142,950 இலட்சத்துடன் (சிஎஉ 5,170 இலட்சம்) ஒப்பிடுகையில் 1986 இல் ரூ. 158,780 இலட்சமாக (சிஎஉ 4,830 இலட்சம்) அமைந்தன. முக்கியமான இலாபங்கள் ஆடைகளின் ஏற்றுமதிகளிலும் கைத்தொழில் ஏற்றுமதிகளிலும் (58 சதவீதம்) இருந்து கிடைத்தன. ஆனுல் இவ்வகுப்பைச் சார்ந்த ஏற்றுமதிகளில் மிகவும் ஊக்க மளிக்கும் செயலாற்றம் வைரக்கல் ஏற்றுமதியிலிருந்து கிடைத்தது. இது 1985 இன் ரூ. 3,130 இலட்சத்தில் (சிஎஉ 110 இலட்சம்) இருந்து 1986 இல் ரூ. 10,470 இலட்சமாக (சிஎஉ 320 இலட்சம்) மூன்றுமடங்கு அதிகரிப்பைப் பதிவுசெய்தது. இத்துறையின் பொதுவான செயலாற்றத்தினை மட்டுப்படுத்திய முக்கியமான ஒரு காரணி பெற்ருேலிய ஏற்றுமதிகளின் பெறுமதியில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியாகும். இது 1985 இன் ரூ. 38,770 இலட்சத்திலிருந்து (சிஎஉ 1,400 இலட்சம்) 1986 இல் ரூ. 23,580 இலட்சத்திற்கு (சிஎஉ 720 இலட்சம்) 39 சதவீதத்தினுல் (சிஎஉ நியதிகளில் 49 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது.

சீராக்கப்பட்ட சுங்கத்தரவுகளின்படி மொத்த இறக்குமதிச் செலவு 1985 இன் ரூ. 540,490 இலட்சத்துடன் (சிஎஉ 19,560 இலட்சம்) ஒப்பிடுகையில் 1986 இல் ரூ. 546,090 இலட்சமாக (சிஎஉ 16,600 இலட்சம்) விளங்கியது. இது ரூபாநியதிகளில் சிறிதளவு அதிகரிப்பாகும். ஆனுல் சிஎஉ நியதிகளில் 15 சத வீதமான வீழ்ச்சியாகும். வீழ்ச்சி இடை நிலேப்பொருட்கள், முதலீட்டுப்பொருட் கள் ஆகிய இரண்டிலும் பிரதிபலிக்கப்பட்டது. முதலீட்டுப்பொருட்கள் மீதான செலவு 1985 இன் ரூ. 103,870 இலட்சத்துடன் (சிஎஉ 3,760 இலட்சம்) ஒப்பிடுகையில் 1986 இல் ரூ. 105,560 இலட்சமாக அமைந்து (சிஎஉ 3,210 இலட்சம்) ரூபா நியதிகளில் 2 சதவீதமான மிதமான அதிகரிப்பை, ஆனுல் சிஎஉ நியதிகளில் 15 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. இதேவேளே இடை நிலேப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவு முந்திய ஆண்டின் ரூ. 255,320 இலட்சத்துடன் (சிஎஉ 9,240 இலட்சம்) ஒப்பிடுகையில் ரூ. 223,140 இலட்ச மாக (சிஎஉ 6,780 இலட்சம் ) அமைந்தது. இது ரூபா நியதிகளில் 13 சதவீதமும் சிஎஉ நியதிகளில் 27 சதவீதமும் கொண்ட வீழ்ச்சியாகும். பெற்ருேலியம், கோதுமைத்தானியம், வளமாக்கி போன்ற இடைநிலேப் பொருட்கள் மீதான செலவு கணிசமாக வீழ்ச்சியடைந்தது. பெரும்பாலும் மசகு எண்ணெயின் விலே யில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி காரணமாக பெற்ருேலிய இறக்குமதிகளின் பெறுமதி முந்திய ஆண்டினதை விட அரைப்பங்கிற்கும் குறைவானதாக ரூ. 62,930 இலட்சமாக (சிஎஉ1,910 இலட்சம்) விளங்கியது. கோதுமைத்தானி யத்தின் சராசரி விலே இரு ஆண்டுகளிலும் மெற்றிக்தொன் ஒன்றுக்கு சிஎஉ 150 இலிருந்து சிஎஉ 106 ஆகக் கணிசமாக வீழ்ச்சியடைந்தமையின் விளேவாக இறக்கு மதி அளவு அதிகரித்த போதிலும் அதன் இறக்குமதிகளின் பெறுமதி 1985 இன் ரூ. 27,650 இலட்சத்திலிருந்து (சிஎஉ 1,000 இலட்சம்) 1986 இல் ரூ. 23,700 இலட்சத்திற்கு (சிஎஉ720 இலட்சம்) வீழ்ச்சியடைந்தது. மறுபுறம் நுகர்வோர் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவு 1986 இல் ரூ. 186,090 இலட்சமாக அமைந்து (சிஎஉ 5,660 இலட்சம்) முந்திய ஆண்டினேவிட ரூபாநியதிகளில் 30 சதவீத அதிகரிப்பையும் சிஎஉ நியதிகளில் 10 சதவீத அதிகரிப்பையும் பதிவு செய்தது. இவ் அதிகரிப்பு எல்லா முக்கிய வகையான நுகர்வோர் பொருட்களி லும் பிரதிபலிக்கப்பட்டது.

நீண்டகாலமாக இலங்கையின் இறக்குமதி அமைப்பில் நுகர்வோர் பொருட்கள் மிகுந்த செல்வாக்கினை வகித்து சென்மதி நிலுவையினை மிகவும் இக்கட்டுக்குள்ளாக்கியது மட்டுமன்றி அபிவிருத்தி நோக்கங்களுக்காகத் தேவைப்பட்ட இறக்குமதிகளைப் பெறும் வேலையினை அந்த அளவிற்கு மிகவும் கடினமாக்கியது. எனினும் குறிப்பாக பசுமைப் புரட்சியின் பின்னர் நாட்டின் உள்நாட்டு உணவு உற்பத்தியினை அதிகரிப்பதில் வெற்றி அதிகரித்து வருவதால் நாடு நுகர்வோர் பொருட்களின் இறக்குமதிகளின் அளவினைக் குறைக்கக்கூடியதாக இருந்ததுடன் அதன் விளைவாக மிகவும் நெகிழ்ச்சியுடையதும் அபிவிருத்தி நோக்குடையதுமான இறக்குமதி அமைப்பினையும் ஏற்படுத்த உதவியது. இவ்வாறாக 1984 அளவில் கோதுமைத்தானியம் நீங்கலாக மொத்த இறக்குமதிகளில் நுகர்வோர் பொருட்களின் இறக்குமதிகளின் பங்கு 23 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைய இடைநிலைப்பொருட்கள், முதலீட்டுப்பொருட்கள் ஆகிய இரண்டினதும் பங்கு அதிகரித்து இவை இரண்டும் ஒன்றுசேர்ந்து இவ்வாண்டில் 76 சதவீதத்திற்கு வகைகூறின. எனினும் 1985 இல் இப்போக்கில் மாற்றம் ஏற்பட்டு மொத்த இறக்குமதிகளில் நுகர்வோர் பொருட்களின் பங்கு 26 சதவீதத்திற்கு அதிகரித்தது. 1986 இல் மொத்த இறக்குமதிகளில் நுகர்வோர் பொருட்களின் பங்கு 34 சதவீதத்திற்கு உயர்வடைந்து இக்கணிப்பில் மேலும் பின்னடைவினை ஏற்படுத்தியது. மொத்த இறக்குமதிகளில் இடை நிலைப்பொருட்களின் பங்கு 1985 இன் 47 சதவீதத்திலிருந்து 1986 இல் 41 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமை பெரும்பாலும் பெற்றோலிய இறக்குமதிகளின் பெறுமதியில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி காரணமாக ஏற்பட்டது. அதேவேளை அண்மை ஆண்டுகளில் வேளாண்மைத்துறையில் செய்யப்பட்ட மிகஉயர்ந்த மட்டத்திலான முதலீடுகளைக் கருத்திற்கொள்கையில் இறக்குமதிகளின் உள்ளடக்கத்தில் ஏற்பட்ட மாற்றமுறும் போக்கு கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

வர்த்தக மாற்றுவிகிதம் பாதகமாக அமைந்தபோதிலும் முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1986 இல் வர்த்தகம், பணிகள் நடைமுறைக்கணக்குகள் ஆகிய யாவும் குறைவான குறைகளைப் பதிவுசெய்து சென்மதிநிலுவைக் கொடுப்பனவுகளில் சிறிதளவு முன்னேற்றத்தினைக்காட்டின. வர்த்தகக் கணக்கு மீதான குறை 1985 இன் சிஎஉ 7,110 இலட்சத்திலிருந்து 1986 இல் சிஎஉ 6,440 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தவேளையில் பணிகள் கணக்கின் குறை இவ் இரு ஆண்டுகளிடையேயும் சிஎஉ 1,330 இலட்சத்திலிருந்து சிஎஉ 1,150 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதே காலப்பகுதியில் நடைமுறைக் கணக்குக்குறை 1985 இன் சிஎஉ 4,100 இலட்சத்திலிருந்து 1986 இல் சிஎஉ 3,570 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்ததுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாசாரமாக இது 1985 இன் 6.9 சதவீதத்திலிருந்து 6.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும் நடைமுறைக்கணக்கு முன்னேற்றத்தின்போதும் பொதுவான சென்மதி நிலுவை நிலைமை தொடர்ந்தும் பாதகமாக விளங்கியதுடன் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளும் இவ் ஆண்டில் வீழ்ச்சியடைந்தன.

சென்மதி நிலுவைகளின் பணிகள் கணக்கு 1986 இல் குறைவான குறையினைப் பதிவு செய்தது. பணிகள் கணக்கின் குறை 1985 இல் பதிவுசெய்யப்பட்ட ரூ. 36,470 இலட்சம் (சிஎஉ 1,330 இலட்சம்) கொண்ட குறையுடன் ஒப்பிடுகையில் 1986 இல் ரூ. 36,830 இலட்சமாக (சிஎஉ 1,150 இலட்சம்) அமைந்தது. இக்குறைப்பு வட்டிக் கொடுப்பனவுகள், அரசின்செலவு, பல்வகைப்பணிகள் என்பவற்றில் ஏற்பட்ட குறைந்த அளவான தேறிய வெளிப்பாய்ச்சல் காரணமாக ஏற்பட்டதாகும்.

Central Bank of Sri Lanka
22679
11 JUN 2009
LIBRARY & INFORMATION CENTRE
Communications Department

அட்டவணை 1.3

## சென்மதி நிலுவையின் தொகுப்பு 1983—1986

பத்து இலட்சம் ரூபாய்களில் (சி. எ. உ. பத்து இலட்சம் அடைப்புக்குறிக்குள்)

| விடயங்கள் | 1983(அ) | 1984(அ) | 1985(அ) | 1986(ஆ) |
|---|---|---|---|---|
| வணிகப் பொருட்கள் (தேறிய) ... | —20,168 (—801) | —11,850 (—453) | —19,801 (—711) | —21,017 (—644) |
| காரணியல்லாப் பணிகள் (தேறிய) ... | 1,803 (73) | 1,666 (64) | — 201 (—8) | 178 (3) |
| காரணிப் பணிகள் (தேறிய) ... | —3,214 (—129) | —3,401 (—130) | — 3,445 (—125) | — 3,861 (—118) |
| தனியார் மாற்றல்கள் (தேறிய) ... | 6,441 (256) | 7,031 (270) | 7,212 (262) | 8,251 (250) |
| அலுவல்சார் மாற்றல்கள் (தேறிய) ... | 4,016 (160) | 5,154 (198) | 4,828 (172) | 4,988 (152) |
| நடைமுறைக் கணக்கு நிலுவை ... | —11,122 (—441) | —1,400 (—51) | —11,408 (—410) | —11,461 (—357) |
| மொத்த நிலுவை ... | +342 (+0.6) | +7,062 (+297) | —1,060 (—110) | —2,124 (—74) |
| **சில முக்கிய குறிகாட்டிகள்** | | | | |
| வர்த்தக மாற்றுவீதம் (1981=100) ... | 113 | 134 | 108 | 102 |
| தேறிய பெற்றோலிய இறக்குமதிகள் ... | 8,342 (332) | 7,394 (284) | 7,109 (257) | 3,936 (120) |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நடைமுறைக் கணக்குக்குறை ... | 9.1 | 0.9 | 6.9 | 6.5 |
| மொத்த பன்னாட்டு ஒதுக்குகள் ... | 13,026 (499) | 18,942 (735) | 18,367 (611) | 17,152 (492) |
| இறக்குமதிகளின் மாதங்களில் பன்னாட்டு ஒதுக்குகள் (இ) ... | 3.2 | 4.4 | 4.4 | 3.4 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகம்.
(இ) அடுத்த ஆண்டின் இறக்குமதிகளுக்காக சிஎஉ நியதியில் திட்டமிடப்பட்டது.

பன்னாட்டுச் சந்தைகளில் வட்டிவீதங்களில் ஏற்பட்ட கீழ் நோக்கிய அசைவு பன்னாட்டு நாணய நிதியத்தினால் சிஎஉ மீதான வட்டிவீதங்கள் குறைக்கப்பட்டமையுடன் இணைந்து 1986 இல் வெளிநாட்டுக்கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளைக் குறைப்பதற்கு உதவியது. இவற்றுடன் வெளிநின்ற வர்த்தகக் கடன்பாடுகளின் மட்டம் 1985 இன் சிஎஉ 8,340 இலட்சத்திலிருந்து 1986 இல் சிஎஉ 7,660 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தமையும் கடன்சுமையைக் குறைக்க ஒரு அளவுக்கு உதவியது. இதன் விளைவாக பன்னாட்டு நாணய நிதிய எடுப்பனவுகள் மீதான கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 1985 இன் ரூ. 54,040 இலட்சத்திலிருந்து (சிஎஉ 1,960 இலட்சம்) 1986 இல் ரூ. 53,360 இலட்சத்திற்கு (சிஎஉ 1,620 இலட்சம்) சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. எனினும் சென்மதி நிலுவைகளில் வட்டிக் கொடுப்பனவுகள் தொடர்ந்தும் மிகப்பெரும் தனி ஒரு விடயமாக விளங்கியது.

இது அண்மைய ஆண்டுகளில் சென்மதி நிலுவையின் நிதியிடலுக்கு வர்த்தகக் கொடுகடன்கள் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டமையினதும், சில அரசதுறை நிறுவனங்களினுல் மேற்கொள்ளப்பட்ட பெரும் அளவிலான வர்த்தகக் கடன் பாடுகளினதும் விளைவாக ஏற்பட்டமை தெளிவானதாகும்.

1986 ஆம் ஆண்டு சுற்றுலாக் கைத்தொழில் மேலும் பின்னடைவினை அனுபவித்தது. இதன் மொத்த வருவாய்கள் முந்திய ஆண்டின் மட்டத்திலிருந்து சிஎஉ நியதிகளில் 13.3 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தன. சுற்றுலாவிலிருந்து கிடைத்த மொத்த வருவாய்கள் 1985 இன் சிஎஉ 810 இலட்சத்திற்கு மாருக 1986 இல் சிஎஉ 700 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. சில சாதகமற்ற நிலைமைகளின் பின்னணியில் சுற்றுலாப்பயணங்களின் உள்வருகை 1986 இல் 10.6 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தவேளையில் சுற்றுலாப்பயணியின் சராசரிச் செலவும் 1985 இன் சிஎஉ 315 இலிருந்து 1986 இல் சிஎஉ 306 இற்குச் சிறி தளவால் வீழ்ச்சியுற்றது.

அண்மை ஆண்டுகளில் அதிகரித்த முக்கியத்துவத்தினைப்பெறும் சென்மதி நிலுவை விடயம் யாதெனில் தனியார் பணவனுப்பல்களின் பேரிலான வரவுகள் ஆகும். எனினும் இவ்விடயம் அண்மை ஆண்டுகளில் காணப்பட்ட அதேயளவு செழிப்பினை 1986 இல் காட்டத்தவறியது. இவ் ஆண்டில் மொத்த வரவுகள் ரூபா நியதிகளில் 15.4சத வீதத்தினுல் அதிகரித்தபோதிலும் சிஎஉ நியதிகளில் வரவு கள்3.8 சதவீதத்தினுல் வீழ்ச்சியுற்றன. மொத்தத் தனியார் பணவனுப்பல்கள் 1985 இன் ரூ. 79,200 இலட்சத்துடன் (சிஎஉ 2,880 இலட்சம்) ஒப்பிடுகையில் 1986 இல் ரூ. 91,420 இலட்சமாக (சிஎஉ 2,770 இலட்சம்) விளங்கியது. செயற்றிட்ட, பண்ட, நன்கொடைகளை உள்ளடக்கிய அலுவலக மாற்றல்கள் 1985 இன் சிஎஉ 1,720 இலட்சத்திலிருந்து 1986 இல் சிஎஉ 1,520 இலட்சத் திற்கு வீழ்ச்சியடைந்து சிஎஉ நியதிகளில் கணிசமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது, இம்மாற்றங்களின் தேறிய விளைவு சிஎஉ நியதிகளில் தனியார், அலுவலக மாற்றல்கள் இரண்டினதும் பேரிலான மொத்த வரவுகள் 7.4 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தமையாகும்.

1986 இல் தனியார் அலுவலக மாற்றல்களின்பேரில் ஏற்பட்ட தேறிய உள்வருகைகள் பொருட்கள், பணிகள் கணக்கின் குறையில் ஏறக்குறைய அரைப் பங்கினை ஈடு செய்யப்போதுமானதாக அமைந்து, நடைமுறைக்கணக்குக் குறை யான ரூ. 114,610 இலட்சமும் (சிஎஉ 3,570 இலட்சம்) நாணயமல்லா மூலதனப் பாய்ச்சல்களினுல் நிதியிடப்பட வேண்டி ஏற்பட்டது. மொத்தஉள் நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நோக்குகையில் நடைமுறைக் கணக்குக் குறை 1985 இன் 6.9 சதவீதத்திலிருந்து 1986 இல் 6.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந் தது. அலுவலகமாற்றல்கள் நீக்கப்படுமிடத்து 1986 இன் விகிதாசாரம் முந்திய ஆண்டின் 9.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 9.3 சதவீதமாக விளங்கியது. 1982 தொடக்கம் அவதானிக்கப்பட்டுவந்த வீழ்ச்சிப்போக்கினை உறுதிப்படுத்துவ தாக நாணயமல்லா மூலதன உட்பாய்ச்சல்மேலும் வீழ்ச்சியடைந்ததுடன் 1986 இன் வீழ்ச்சி 7.9 சதவீதமாக அமைந்தது. தனியார் மூலதனத்தின் தேறிய உட்பாய்ச்சல்கள் 1985 இன் சிஎஉ 580 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1986 இல் சிஎஉ 550 இலட்சமாக விளங்கின. அரசதுறைக்கான மூலதனத்தின் தேறிய உட்பாய்ச்சல்கள் முந்திய ஆண்டின் சிஎஉ 2,700 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் சிஎஉ 2,470 இலட்சமாக அமைந்து 8.5 சதவீத வீழ்ச்சியைப் பிரதிபலித்தது.

நடைமுறைக் கணக்குக்குறையினை நிதியிடுவதற்குத் தேவையான அளவினை விட தேறிய நாணயமல்லா மூலதன உட்பாய்ச்சல் குறைவாக விளங்கியமையால் ரூ. 21,240 இலட்சங்கொண்ட (சிஎஉ 740 இலட்சம்) பொதுவானகுறை ஏற்பட்டது. இது வெளிநாட்டுச் சொத்துக்களை எடுப்பனவு செய்வதன் மூலம் நிதியிடப்படவேண்டியிருந்தது. இதன்விளைவாக 1986 இல் மொத்த வெளி நாட்டுச் சொத்துக்கள் 19 சதவீதத்தினல் வீழ்ச்சியுற்றன. இது 1985 இல் பதிவுசெய்யப்பட்ட 17 சதவீத வீழ்ச்சிக்கு மேலாக ஏற்பட்டது. மொத்த வெளி நாட்டுச் சொத்துக்கள் முந்திய ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூ. 183,670 இலட்சத்துடன் (சிஎஉ 6,110 இலட்சம்) ஒப்பிடுகையில் 1986 இன் இறுதியில் ரூ. 171,520 இலட்சமாக (சிஉஎ 4,920 இலட்சம்) விளங்கியது. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களின் மட்டம் 1987 இற்குத் திட்டமிடப்பட்ட இறக்கு மதிகளில் 3.4 மாதங்களின் அளவினை நிதியிடப்போதுமானதாகும்.

1986 இல் இலங்கை ரூபா, இந்திய ரூபா நீங்கலான எல்லா முக்கிய நாணயங்களுக்கும் எதிராக பெறுமதியில் தேய்வடைந்தது. டியூஸ்மார்க், யப்பா னியயென் ஆகிய இரண்டுக்குமெதிராக ரூபா 24 சதவீதத்தினல் தேய்வடைந்தது. பிரான்சிய பிராங்சிற்கு எதிராக 18.4 சதவீதத்தினலும் ஐ.இ.பவுணுக்கு எதிராக 5.3 சதவீதத்தினலும் தேய்வடைந்தது. ஐ. அ. டொலருக்கெதிரான பெறு மானத்தேய்வு 3.9 சதவீதமாகவும் சிஎஉ விற்கெதிரான தேய்வு 13.7 சதவீத மாகவும் விளங்கின. எனினும் 1986 இல் ரூபா இந்திய ரூபாவிற்கெதிராக 4.3 சதவீதத்தினல் பெறுமதியில்உயர்வடைந்தது.

வெளிநாட்டுப்படுகடனின் மட்டமும் வளர்ச்சிவீதமும் அண்மைய ஆண்டு களில் குறிப்பிடத்தக்க கவனம் எடுக்கப்படவேண்டிய விடயமொன்ருக விளங்கு கின்றது. வெளிநாட்டுப் பொறுப்புக்களின் துரிதமான வளர்ச்சி குறிப்பாக, குறுகியகால முதிர்ச்சியினைக்கொண்டவை சென்மதி நிலுவை முகாமைத்து வத்தைக் கட்டுப்படுத்தும் காரணியாக விளங்குகின்றன. குறுகிய காலக் கடன் களையும் வர்த்தகக் கொடுகடனையும் உள்ளடக்கும் மொத்த வெளிநாட்டுப்படு கடனின் வெளிநிற்கும் தொகை 1985 இறுதியின் ரூ. 943,030 இலட்சத்தி லிருந்து (சிஎஉ 31,620 இலட்சம்) 1986 இறுதியில் ரூ. 1,133,080 இலட்சத் திற்கு (சிஎஉ 32,620 இலட்சம்) அதிகரித்தது. இது 1985 இன் 4.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1986 இல் சிஎஉ நியதிகளில் வெளிநிற்கும் படுகட னில் 3.2 சதவீதமானதொரு வளர்ச்சியாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தி யில் வெளிநிற்கும் படுகடனின் விகிதம் இரண்டு ஆண்டுகாலப்பகுதியில் 53.8 சதவீதத்திலிருந்து 59.8 சதவீதமாக உயர்வடைந்தது. எனினும் வர்த்தகக் கடன்பாடுகளின் விளைவாலான வெளிநிற்கும்படுகடன் இவ்வாண்டில் சிஎஉ 130 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்தமை குறிப்பிடத்தக்கதொன்ருகும். அத்துடன் பன்னட்டு நாணய நிதியத்திற்கான இலங்கையின் படுகடன் கடப்பாடுகள் புதிய எடுப்பனவுகள் ஏதும் செய்யப்படாமையால் 1986 இல் தொடர்ந்தும் இரண்டா வது ஆண்டாக குறைவடைந்தது. இம்மாற்றல்கள் நாட்டின் படுகடன் நிலை மையை ஒரளவுக்கு முன்னேற்றுவதற்கு உதவின.

குறுகிய, நடுத்தரத் தவணைக் கடன்களின் கடன்தீர்ப்பனவுக்கொடுப்பனவு களையும் எல்லா வெளிநாட்டுக்கடன்கள் மீதான வட்டிக்கொடுப்பனவுகளையும் உள்ளடக்கும் படுகடன் பணிக்கொடுப்பனவுகளும் 1985 இல் ரூ. 93,620 இலட்சத்திலிருந்து (சிஎஉ 3,400 இலட்சம்) 1986 இல் ரூ. 116,440 இலட்சத் திற்கு (சிஎஉ 3,560 இலட்சம்) அதிகரித்தது. பன்னாட்டு நாணய நிதியத்திட மிருந்தான எடுப்பனவுகளின் விளைவான மீள் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய கடன்தீர்ப்பனவுக்கொடுப்பனவுகள் ரூ. 45,330 இலட்சத்திலிருந்து (சிஎஉ 1,660 இலட்சம்) ரூ. 68,370 இலட்சத்திற்கு (சிஎஉ 2,100 இலட்சம்) இரண்டு காலப் பகுதியில் உயர்வடைந்தது. எனினும் இவ்வாண்டில் பன்னாட்டுச் சந்தைகளில் வட்டிவீதங்களின் குறைவடைந்தமட்டத்தினதும் பன்னாட்டு நாணய நிதியத் தினால் சிஎஉ வட்டிவீதம் கீழ்நோக்கித் திருத்தப்பட்டமையினதும் காரணமாக பன்னாட்டு நாணய நிதிய கொடுக்கல்வாங்கல்கள் மீதானவை உட்பட வட்டிக் கொடுப்பனவுகளும் பணிக்கொடுப்பனவுகளும் 1985 இன் ரூ. 48,290 இலட்சத் திலிருந்து (சிஎஉ 1,750 இலட்சம்) 1986 இல் ரூ. 48,060 இலட்சத்திற்கு (சிஎஉ 1,460 இலட்சம்) வீழ்ச்சியடைந்தது.

பொதுவாக 1986 இல் சென்மதிநிலுவை அபிவிருத்திகள் பாதிப்படைந்து காணப்பட்டன. தாங்கிருப்பு ஆக்கத்திற்காக உயர்வான இறக்குமதி அளவுகள் பேணப்பட வேண்டியிருந்தமையால் நாடு பன்னாட்டு சந்தைகளின் குறைவான விலைகளின் நன்மைகளை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளமுடியவில்லை. மேலும் முன்னைய ஆண்டினைப்போலவே பாதுகாப்புத் தொடர்பான இறக்குமதி சென்மதி நிலுவையின்மீது அதிகளவு தாக்கத்தினை விளைவித்தது. எனினும் நாட்டின் முதன்மை வேளாண்மை ஏற்றுமதிகளை ஏறத்தாழ ஆண்டு முழுவதிலும் பாதிப்படையச் செய்த குறைவடைந்த பண்டவிலைகள் மிகவும் ஏமாற்றமான அனுபவமாக விளங்கின. நாட்டில் தொடர்ந்து காணப்படும் உள்நாட்டுக் குழப்பங்களினால் பாதிப்படைந்தவற்றில் ஒன்றான சுற்றுலாக் கைத்தொழில் இவ்வாண்டில் மீட்சி யுறும் அறிகுறிகள் எதனையும் காட்டத்தவறிவிட்டது. மறுபுறத்தில் நாட்டின் வெளிநாட்டுப்படுகடன் கடப்பாடுகள் ஓரளவுக்கு அண்மைய ஆண்டுகளில் வர்த் தக கடன்பாடுகளை அதிகளவுக்கு நாடியமை காரணமாக உயர்வாகக் காணப் பட்டது. இவ்வதிகரிப்புக்களின் மொத்தவிளைவு இவ்வாண்டில் செலாவணி வீதத் தின் மீது தொடர்ச்சியான தாக்கம் ஏற்பட்டமையும் வெளிநாட்டுச் சொத்துக்கள் மேலும் வீழ்ச்சியடைந்தமையுமாகும்.

1986 இல் இறைத்தொழிற்பாடுகள் 1985 இனைவிட சிறு முன்னேற்றத்தி னைக் காட்டுவதுபோல தோன்றுகின்றது. பொருளாதாரத்தில் பல ஆண்டுகளாக பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடின்மையின் முக்கிய மூலமாக இறைச் சமமின்மைகள் விளங்கி பணநிரம்பல், விலைகள், சென்மதிநிலுவை, செலாவணி வீதம் என்பவற்றில்தொடர்ச்சியான தாக்கத்தினை ஏற்படுத்தியது. இப்பின்னணி யில் பொருளாதாரத்தில் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை இன்னமும் உறுதி யற்றதாக்கும் காரணியாக தோன்றுவது எடுத்துக்காட்டப்படவேண்டிய ஒன்றாக விளங்கிய போதிலும் தோற்றரீதியில் முன்னேற்றமடைந்த இறைச்செயலாற்ற விளைவினை ஆற்றல்மிக்க அபிவிருத்தியொன்றாகக் கணிக்கலாம்.

පුස්තකාලය
මොරටුව විශ්ව විද්‍යාලය, ශ්‍රී ලංකාව
මොරටුව.

அட்டவணை 1.4

## இறை அளவுகள் 1982 — 1986

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயம் | 1982 | 1983 | 1984 | 1985(அ) | 1986(அ) |
|---|---|---|---|---|---|
| வருவாய் ... | 17,809 | 25,210 | 37,731 | 39,010 | 41,955 |
| செலவு ... | 37,900 | 46,816 | 53,593 | 64,685 | 67,551 |
| முற்பணக் கணக்குகள் உட்பட மீண்டெழும் செலவு ... | 19,231 | 25,083 | 31,842 | 34,156 | 34,602 |
| நடைமுறைக் கணக்கின் பற்றுக்குறை (–)/ மிகை (+) ... | —1,422 | +128 | +5,889 | +4,854 | +7,353 |
| மூலதனச் செலவு ... | 18,669 | 21,733 | 21,750 | 30,529 | 32,949 |
| மொத்த வரவு செலவுத் திட்டக்குறை ... | 20,091 | 21,606 | 15,861 | 25,676 | 25,596 |
| நிதியிடல் | | | | | |
| வெளிநாட்டு ... | 8,794 | 10,950 | 11,251 | 12,205 | 13.575 |
| உள்நாட்டு வங்கியல்லா ... | 7,606 | 10,146 | 6,589 | 8,520 | 8,963 |
| உள்நாட்டு வங்கி ... | 4,006 | 1,204 | —2,644 | 7,451 | 2,299 |
| காசு நிலுவைப் பயன்பாடு ... | —315 | —694 | 666 | —2.501 | 760 |

### மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக

| விடயம் | 1982 | 1983 | 1984 | 1985(அ) | 1986(அ) |
|---|---|---|---|---|---|
| வருவாய் ... | 17.9 | 20.7 | 24.5 | 24.0 | 23.4 |
| செலவு ... | 38.2 | 38.5 | 34.9 | 39.8 | 37.6 |
| முற்பணக் கணக்குகள் உட்பட மீண்டெழும் செலவு ... | 19.4 | 20.6 | 20.7 | 21.0 | 19.3 |
| நடைமுறைக் கணக்கின் பற்றுக்குறை (—)/ மிகை (+) ... | —1.4 | +0.1 | +3.8 | +3.0 | +4.1 |
| மூலதனச் செலவு ... | 18.8 | 17.9 | 14.1 | 18.8 | 18.4 |
| மொத்த வரவு செலவுத் திட்டக்குறை ... | 20.2 | 17.8 | 10.3 | 15.8 | 14.3 |
| நிதியிடல் | | | | | |
| வெளிநாட்டு ... | 9.9 | 9.0 | 7.3 | 7.5 | 7.6 |
| உள்நாட்டு வங்கியல்லா ... | 7.7 | 8.3 | 4.3 | 5.2 | 5.0 |
| உள்நாட்டு வங்கி ... | 4.0 | 1.0 | —1.7 | 4.6 | 1.3 |
| காசு நிலுவைப் பயன்பாடு ... | —0.3 | — 0.6 | 0.4 | —1.5 | 0.4 |

* தற்காலிகமானவை.

மூலங்கள்: திறைசேரி.
இலங்கை மத்திய வங்கி.

1986 இல் முன்னேற்றமடைந்த இறைத்தொழிற்பாடுகள் பல காரணிகளின் விளைவாகும். முதலாவது பல வரிகளிலிருந்தான திரட்டல் குறைவடைந்தபோதும் இறக்குமதித்தீர்வைகள், கலால்தீர்வைகள், வரியல்லா வருவாய் ஆகியவற்றிலிருந்தான உயர்வான பெறுகைகளின் விளைவாக அரசின் மொத்த வருவாய் உயர்மட்டத்தில் பேணப்பட்டது. இரண்டாவது பலதுறைகளிலிருந்து உயர்மட்ட செலவினங்களுக்கான போட்டிரீதியிலான கோரல்களுக்கு மத்தியிலும் மீண்டெழும் செலவினத்தின் வளர்ச்சி மிகக்குறைவானதாகப் பேணப்பட்டமையாகும். இவ்விரு நிலைமைகளும் நடைமுறைக்கணக்கின்மீது கூடிய இறைச்செயலாற்ற விளைவினை ஏற்படுத்துவதற்கு ஊக்கமளிக்கத்தக்கனவாகும். இதன்படி 1986 இல் வரவு செலவுத்திட்டத்தின் நடைமுறைக் கணக்கு ரூ. 73,530 இலட்ச அளவிலான மிகையைக் கொண்டிருந்தது. ஒப்பிடுகையில் 1985 இல் நடைமுறைக்கணக்கிலிருந்த மிகை ரூ. 48,540 இலட்சமாகும். நடைமுறைக் கணக்கின்மீதான இவ்வூக்கமளிக்கும் விளைவின நோக்குகையில் மூலதனச் செலவினத்தில் 8 சதவீதங் கொண்ட அதிகரிப்புக் காணப்பட்டபோதும் இவ்வாண்டு ரூ. 255,960 இலட்சங் கொண்ட மொத்தப் பற்றுக்குறையுடன் முடிவடைந்தது. இது தொடக்கத்தில் மதிப்பிடப்பட்ட பற்றுக்குறையைவிட சிறிதளவு குறைவானதாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் தொடர்புபடுத்துகையில் பற்றுக்குறை 1985 இன்

47017

15.8 சதவீதத்திற்கு மாறாக 14.3 சதவீதமாக விளங்கியவேளையில் தேறிய காசுப்பற்றாக்குறையும் இவ்விரு ஆண்டுகளில் 11.6 சதவீதத்திலிருந்து 10.1 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. குறைவான மொத்தப் பற்றாக்குறைக்கு மேலாக வங்கியல்லாத் துறையிலிருந்து பெற்ற திறைசேரி உண்டியல்களுக்கான அதிகரித்த உதவுதொகைகள் விளங்கின. இச்சாதகமான அபிவிருத்திகள் அரசு வரவு செலவுத் திட்டப்பற்றாக்குறையின் பணவீக்க நிதியிடலை நாடுதலைக் குறைப்பதற்கு இயலச் செய்ததுடன் அந்நிதியிடல் 1985 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.9 சதவீதத்திலிருந்து 1986 இல் 1.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது.

எனினும் வரவு செலவுத்திட்டத்தின் செயலாற்றத்தில் இச்சிறிதளவு முன்னேற்றம் காணப்பட்டாலும் 1986 இல் இறை அளவுகளின் போக்கு தற்போது இலங்கையின் இறைமுறை எவ்வாறான நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் கீழ்த் தொழிற்படுகிறது என்பதனை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அரசிறை 1985 இல் 24 சதவீதத்திலிருந்து 1986 இல் 23 சதவீதமாக வீழ்ச்சியடைந்தவேளையில் மூலதனச் செலவினம் 18.8 சதவீதத்திலிருந்து 18.4 சதவீதமாக சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. முற்பணக்கணக்குத் தொழிற்பாடுகள் உட்பட மீண்டெழும் செலவினம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக 1985 இல் 21 சதவீதத்திலிருந்து 1986 இல் 19 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது. மறுபக்கம் படுகடன் மீளக்கொடுப்பனவுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக 4.2 சதவீதத்தில் முன்னைய ஆண்டின் மட்டத்தில் மாறாதிருந்தது.

மேற்கூறப்பட்ட இறைத் தொழிற்பாடு மூலவளங்கள்மீது அரசு கட்டுப்பாட்டினை வைத்திருப்பதற்கான ஆற்றலானது அதிகரித்துச்செல்லும் தாக்கங்களுக்குள்ளாகியுள்ள நாட்டின் இறை நிலைமையில் சிறிதளவு வீழ்ச்சி காணப்படுவதை எடுத்துரைப்பதாகத் தோன்றுகிறது. இது அரசிறை மூலமாக அதேயளவான மூலவளங்களை திரட்டுவதனைத் தொடர்வதற்கு தேவைப்படும் மேலதிக இறை முயற்சிகளின் அளவையும் குறிப்பாக இவ்வகை அரசிறை வெளிநாட்டுத் துறையின் அபிவிருத்திகளுக்கு மிகவும் அவசியமானதொன்றாக உருவாகும் நிலைமையை எடுத்துக்காட்டுகிறது. உதாரணமாக 1986 இல் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்த்திரட்டல் 16 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தவேளையில் தேயிலை ஏற்றுமதித் தீர்வைகளின் மூலமாக மட்டும் பெறப்பட்டவை 21 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளையில் தெங்கு ஏற்றுமதிகளின் அளவு 18 சதவீதத்தால் அதிகரித்தாலும் ஏற்றுமதித்தீர்வைத்திரட்டல் மூன்றில் ஒரு பங்கால் வீழ்ச்சியடைந்தது.

செலவுகள் பக்கத்தில் தனியாளுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் மீதான கடப்பாடுகள் வளர்ந்துவரும் விடயமாகக் காணப்பட்டது. 1986 இல் அவ்வகை ஊதியக்கொடுப்பனவுகள் 19 சதவீதத்தால் அதிகரித்து முன்னைய ஆண்டின் 22 சதவீதத்திற்கெதிராக மொத்த மீண்டெழும் செலவினத்தின் 26 சதவீதத்திற்கு வகைகூறியது. அதேவேளை இவ்வாண்டில் பொதுப்படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் மொத்த மீண்டெழும் செலவினத்தில் 27 சதவீதத்தினைக்கொண்டிருந்தது. இது முன்னைய ஆண்டின் மட்டத்தினை விட 12 சதவீதமான அதிகரிப்பாகும். இவ்வதிகரித்துச் செல்லும் செலவின் விடயங்கள் மூலவளங்களின் கிடைத்தல் தொடர்பாக கூடியளவு ஈடுசெய்யத்தக்க மட்டத்தில் செலவினங்கள் மீது அரசின் சிக்கனப்படுத்தும் ஆற்றலை குறைவடையச் செய்யும் உயர்வலுமிக்க இறை உறுதிப்பாடொன்று காணப்படவேண்டியதை எடுத்துக் காட்டுவதாகத் தோன்றுகின்றது.

47017

1986 இன் நாணய அபிவிருத்திகளின் முக்கிய பண்பாக வெளிநாட்டு வங்கிச் சொத்துக்களின் (தேறிய) வீழ்ச்சியினுல் ஏற்பட்ட விரிந்த பணநிரம்பலின் (M2) வளர்ச்சிவீதத்தின் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியும் உள்நாட்டுக்கொடுகடனின் குறைந்த விரிவாக்கமும் விளங்கின. அரசின் தொடர்ச்சியான உயர்மட்டத்திலான செலவுகளுடன் தனியார்துறையிலிருந்து கொடுகடனுக்கான நலிவடைந்த கேள்வியினுலும் வர்த்தகவங்கிகள் இவ்வாண்டு முழுவதிலும் உயர்வான திரவத்தன்மையை கொண்டுவிளங்கின. இதன்விளைவாகவும் மத்தியவங்கியால் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்குத்தேவைகளின் தளர்வினுல் உதவியளிக்கப்பட்டதனுலும் வட்டி வீதங்கள் வீழ்ச்சியடையத் தொடங்கின. எனினும் பொருளாதாரத்தில் காணப்பட்ட மிதமான பணவீக்கப்போக்குகளினுல் உண்மைநியதிகளில் வட்டிவீதங்கள் பொதுவாகச் சாதகமானதாக காணப்பட்டன. மத்தியவங்கி நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 91 இன் கீழ் அதன் சொந்தப்பிணைகளை வெளியிடுவதன்மூலம் மேலதிகத்திரவத்தன்மையை ஈர்ப்பதனை தொடர்ந்தும் மேற்கொண்டது. இதே வேளை 1984 இல் விதிக்கப்பட்ட அளவுரீதியான கொடுகடன் கட்டுப்பாடுகளில் சில கொடுகடன் கொள்கைகளுக்கு கூடியளவு சந்தை வசதிகளை வழங்குவதற்காகத் தளர்த்தப்பட்டன. மத்தியவங்கி கட்டுப்பாடான பொதுவான நாணயக்கொள்கையைத் தொடர்ந்தும் பின்பற்றியது. ஆனுல் இவ்வமைப்பிற்குள் ஏற்றுமதிகளுக்கான மீள்நிதியிடல் வசதிகளை அளிப்பதன் மூலம் முன்னுரிமைத்துறைகளில் உற்பத்தியை ஊக்குவிப்பதன்மூலமும் பொருளாதாரத்தின் உண்மைத் துறையினை முன்னேற்றுவதனை நாடிநிற்கின்றது.

1986 இல் நாணயத்துறையின் அபிவிருத்திகள் மாறுபட்டவையாக விளங்கின. பொதுமக்கள்வசமுள்ள நாணயத்தையும் கேள்வி வைப்புக்களையும் உள்ளடக்கும் குறுகியவகையில் அளவிடப்பட்ட பணநிரம்பல்( M1) 1985 இன் ஏறத்தாழ ஒரே அளவு அதிகரிப்பான ரூ. 19,370 இலட்சம் அல்லது 12 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 24,180 இலட்சத்தால் அல்லது 13 சதவீதத்தால் அதிகரித்தது. மறுபக்கத்தில் M 1 ஐயும் வர்த்தகவங்கிகள் வசமுள்ள தனியார்துறையின் தவணை, சேமிப்பு வைப்புக்களையும் உள்ளடக்கியதாக வரைவிலக்கணப்படுத்தப்பட்ட விரிந்தபணநிரம்பல் (M2) ரூ. 24,510 இலட்சத்தால் உயர்வடைந்தது. 1986 இல் M 2 இல் ஏற்பட்ட ஏறத்தாழ முழு அதிகரிப்பும் குறுகிய பணத்தின் வளர்ச்சியிலிருந்து கிடைத்ததாகும். சதவீத நியதியில், 1985 இன் மிகவும் உயர்வான 11 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1986 இல் M2 இன் விரிவாக்கம் 5 சதவீதமாக மட்டுமே விளங்கியது.

மேலும் 1986 இல் M 1 இன் அதிகரிப்பு ரூ. 17,540 இலட்சத்தால் அல்லது 18 சதவீதத்தால் அதிகரித்த பொதுமக்களின் நாணய கையிருப்பிற்கு அதிகளவில் ஒருபக்கச்சார்புடையதாக விளங்கியது. ஒப்பீட்டுரீதியில் பொதுமக்களால் வைப்புச் செய்யப்பட்ட கேள்வி வைப்புக்கள் 1986 இல் ரூ. 6,640 இலட்சத்தால் அல்லது 7 சதவீதத்தால் மட்டுமே உயர்வடைந்தது. இதனைத் தொடர்ந்து M1 இல் கேள்வி வைப்புக்களின் பங்கு 1985 இன் 48 சதவீதத்திலிருந்து 1986 இறுதியில் 45 சதவீதமாக மேலும் வீழ்ச்சியுற்றது. இது பல ஆண்டுகளாக வங்கித்தொழிலைப் பிரபல்யப்படுத்துவதற்காக முயற்சி எடுத்துவரும் ஒரு நாட்டின் அபிவிருத்தியைத் தடைசெய்யுமொன்ருகும். M1 இல் நாணயவைப்பு விகிதமானது குறிப்பிடத்தக்க காலமாக ஏறத்தாழ 50 சதவீத அளவில் காணப்பட்டு வருகிறது. எனினும் M1 இலுள்ள நாணய வைப்பு விகிதத்தின் பாதிப்படைந்த அபிவிருத்தி உள்நாட்டுக் குழப்பம் காரணமாக நாட்டின் சில பகுதிகளில் கட்டுப்பாடற்ற வங்கித்தொழில் பணிகளை பொதுமக்கள் அனுபவிக்க இயலாது போனமையிலிருந்து ஏற்பட்ட ஒரு தற்காலிக விடயமாக கருதப்படத்தக்கதாகும்.

## அட்டவணை 1.5

## நாணய அளவுகள் 1982–1986

ரூபா பத்து இலட்சங்களில்

| விடயம் | | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 |
|---|---|---|---|---|---|---|
| **உள்நாட்டுக் கொடுகடன்** | ... | 8,431 | 6,895 | 633 | 9,300 | 4,883 |
| அரசுக்கான தேறிய கொடுகடனிலேற்பட்ட அதிகரிப்பு | ... | 4,361 | 383 | —2,979 | 5,793 | 2,198 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு | ... | 190 | —292 | —237 | 290 | 301 |
| கூட்டுறவு நிறுவனங்களுக்கான கொடுகடன் அதிகரிப்பு | ... | —106 | 635 | —255 | —263 | 120 |
| தனியார் துறைக்கான கொடுகடனின் அதிகரிப்பு | ... | 3,986 | 6,170 | 4,104 | 3,480 | 2,263 |
| **தேறிய வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றம்** | ... | —568 | 815 | 6,777 | —691 | —414 |
| **மொத்தச் சொத்துக்கள் பொறுப்புக்களில் ஏற்பட்ட மாற்றம்** | ... | 7,863 | 7,710 | 7,410 | 8,609 | 4,468 |
| விரிந்த பணநிரம்பலில் (M2) ஏற்பட்ட அதிகரிப்பு | ... | 6,063 | 6,747 | 6,170 | 4,982 | 2,451 |
| ஏனைய பொறுப்புக்களில் (தேறிய) ஏற்பட்ட அதிகரிப்பு | ... | 1,800 | 963 | 1.240 | 3,627 | 2,018 |

### நாணய அளவுகளில் சதவீத அதிகரிப்பு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **மொத்த உள்நாட்டுக் கொடுகடனின் சதவீத அதிகரிப்பு** | ... | 24.8 | 16.3 | 1.3 | 18.6 | 8.2 |
| மொத்த சொத்துக்கள், பொறுப்புக்களின் சதவீத அதிகரிப்பு | ... | 21.3 | 17.2 | 14.1 | 14.4 | 6.5 |
| மொத்த உள்நாட்டு கொடுகடன் அதிகரிப்பில் அரசின் சதவீதம் | ... | 51.7 | 5.6 | —470.4 | 62.2 | 45.0 |
| மொத்த உள்நாட்டு கொடுகடன் அதிகரிப்பில் அரசு அல்லாத்துறையின் சதவீதம் | ... | 48.3 | 94.4 | 570.4 | 37.8 | 55.0 |
| விரிந்த பண நிரம்பலின் (M2) சதவீத அதிகரிப்பு | ... | 24.8 | 22.1 | 16.6 | 11.4 | 5.1 |
| குறுகிய பண நிரம்பலின் (M1) சதவீத அதிகரிப்பு | ... | 17.3 | 25.4 | 14.1 | 11.5 | 12.9 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

1986 இன் நாணய அபிவிருத்திகளில் மிகவும் குறிப்பிடத்தக்க பண்புகளில் ஒன்று யாதெனில் 1985 இன் ரூ. 30,440 இலட்சங்கொண்ட அல்லது 11 சத வீதமான கணிசமான அதிகரிப்புக்கும், இலங்கையின் வர்த்தக வங்கித் தொழில் முறை சார்புரீதியாக விரைவான வளர்ச்சியைக்கொண்ட 1978 இலிருந்து 1984 வரையான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 35 சதவீதமான சராசரி வளர்ச்சி வீதத்திற்கும் மாருக ரூ. 330 இலட்சத்தால் மட்டுமே உயர்வடைந்த போலிநாண யத்தின் மிகவும் குறைவான வளர்ச்சியாகும். முதலீட்டின் ஒரு வடிவமாக வங்கி வைப்புக்களின் கவர்ச்சியில் குறிப்பிடத் தக்கதொரு பெயர்வு வெளிப்படையாகக் காணப்பட்டது. போலி நாணயத்தின் இக்குறைந்த வளர்ச்சியானது அரச கூட்டுத்தாபனங்களின் வைப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியினதும் ஏனைய தனி யார்துறை தொகுதிகளின் வைப்புக்களின் மிகக்குறைவான வளர்ச்சியினதும் இணைந்த விளைவாகும். மொத்தத்தில் அரச கூட்டுத்தாபனங்களின் தவணை சேமிப்பு வைப்புக்கள் 1986 இல் ரூ. 10,670 இலட்சத்தால் அல்லது 18 சத வீதத்தால் வீழ்ச்சியுற்றது. அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினதும் இலங்கை மின்சபையினதும் வைப்புக்களில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிகள் அவதா னிக்கப்பட்டன. முன்னையது தேயிலைச் சந்தையில் ஆற்றல் இன்மை காரணமாக வும் பின்னையது திரவ நிதியங்களுக்காக மாற்று முதலீட்டு முறைகளை விரும்பி யமை காரணமாகவும் ஏற்பட்டன. 1986 இறுதியில் இலங்கை அரச திறைசேரி உண்டியல்களில் இலங்கை மின்சபையின் மொத்த முதலீடு ரூ. 30,480 இலட்சத்திற்கு வகைகூறியது. இது 1985 இறுதியின் ரூ. 10,000 இலட்சங் கொண்ட முதலீட்டுடன் ஒப்பிடத்தக்கது.

இதேவேளை ஏனைய தனியார்துறைத் தொகுதியின் தவணை, சேமிப்பு வைப் புக்கள் 1986 இல் குறைந்த வளர்ச்சியைப் பதிவுசெய்தன. இவ்வதிகரிப்பு முன்னைய ஆண்டின் ரூ. 26,370 இலட்சம் அல்லது 13 சதவீதமான மிகவும் கூடுதலான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 10,320 இலட்சமாக அல்லது 4 சதவீதமாகக் காணப்பட்டது. ஏனைய தனியார்துறைத் தொகுதியினது போலி நாணயத்தின் குறைவான வளர்ச்சிக்கு ஏனைய காரணிகளுடன் ஏற்றுமதித் துறையில் ஆற்றல் இன்மையும் சில பகுதிகளில் வங்கிப்பணிகளின் கிடைத்தலை கட்டுப்படுத்திய உள் நாட்டுக்குழப்பமும் காரணமாக இருந்தன.

1986 இல் வெளிநாட்டுத்துறை இரண்டாவது தொடர்ச்சியான ஆண்டாக நாணயக் கூட்டுக்கள் மீது சுருக்கத்தாக்கத்தினை ஏற்படுத்தியது. வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்கள் (தேறிய) 1985 இன் ரூ. 6,910 இலட்சம் அல்லது 7 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1986 இல் ரூ. 4,140 இலட்சத்தால் அல்லது 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. சென்மதி நிலுவைப்பகுதியில் சாதகமான அபிவிருத்திகள் காணப்பட்டபோதிலும் வர்த்தக, நடைமுறைக் கணக்குகள் இரண்டும் முன்னைய ஆண்டிலும் குறைந்த பற்றுக்குறைகளை பதிவு செய்தும் வெளிநாட்டு உதவிப்பாய்ச்சலுக்கான சூழ்நிலை பாதிப்படைந்திருக்கையில் முழுப் பற்றுக்குறையையும் நிரப்புவதற்கு போதியளவு மூலவளங்களைத் திரட்டு வதற்கு நாட்டினுல் முடியவில்லை. 1985 இனைவிட சிறியதாகவிருந்தபோதிலும் 1986 இல் வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்களின் வீழ்ச்சி தொடர்ந்தும் கவனத் திற்கொள்ள வேண்டிய விடயமாகவிளங்குகிறது. ஏனெனில் நாட்டின் பொருளா தார முகாமைத்துவத்தின் மீது வெளிநாட்டுத்துறையினுல் ஏற்படுத்தப்படும் தொடர்ச்சியான தாக்கத்தினை இது பிரதிபலிக்கிறது.

வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்கள் (தேறிய) வீழ்ச்சியடைந்து செல்வதால் 1986 இல் பணநிரம்பலின் வளர்ச்சிக்கு பங்களிக்கும் காரணமாக உள்நாட்டுக்கொடுகடன் விரிவாக்கம் விளங்கியது. எனினும் உள்நாட்டுக்கொடு கடன் விரிவாக்கம் 1985 இன் ரூ. 93,000 இலட்சம் அல்லது 19 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1986 இல் ரூ. 48,830 இலட்சமாக அல்லது 8 சதவீதமாக விளங்கியமை மிகவும் குறைவானதாகும். 1986 இல் உள்நாட்டுக்கொடுகடன் விரிவாக்கத்தின் வீழ்ச்சி அரசிற்கான தேறிய கொடுகடன், தனியார்துறைக்கான மொத்தக்கொடுகடன் ஆகிய இரண்டிலும் பிரதிபலிக்கப்பட்டது. 1986 இல் கொடுகடன் அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க பண்பாக அரசிடமிருந்தான கொடு கடனுக்கான குறைந்த கேள்வி விளங்கியது. 1986 இல் அரசிற்கான தேறிய கொடு கடன் 1985 இன் ரூ. 57,930 இலட்சம் அல்லது 40 சதவீதமான மிகவும் அதிகள விலான அதிகரிப்புக்கு மாறுக ரூ. 21,980 இலட்சத்தால் அல்லது 11 சத வீதத்தால் உயர்வடைந்தது. எனினும் இக்குறைவடைந்த வளர்ச்சி காணப்பட்ட போதிலும் 1984 இல் 29 சதவீதத்திலிருந்து 1985 இல் 34 சதவீதத்திற்கு அதிகரித்த மொத்தக் கொடுகடனில் அரசிற்கான தேறிய கொடுகடன்களின் பங்கு 1986 இல் மேலும் 35 சதவீதமாக அதிகரித்து அரசின் வரவு செலவுத் திட்டத்தினை நிதியிடுவதில் வங்கித் தொழில்துறையின் தொடர்ந்துவரும் முக்கியத் துவத்தினை எடுத்துக்காட்டியது.

வங்கிக்கொடுகடனில் அரசு அதிகளவு தங்கியிருத்தல் நாணய, கொடுகடன் துறையில் உறுதிப்பாட்டினைக் குலைக்கும் முக்கிய காரணியாக அண்மைய ஆண்டு களில் விளங்கி வந்தது. 1986 ஆம் ஆண்டு இப்போக்கிலிருந்து குறிப்பிடத்தக்க விலகலைக் காட்டியது. 1986 இல் வங்கித்தொழில் முறையை அரசு குறைந்தள வில் நாடியமை ஒரு புறத்தில் மொத்த வரவு செலவுத்திட்டப்பற்றுக்குறையில் செய்யப்பட்ட குறைப்பினாலும் மறுபுறத்தில் வங்கியல்லாத் துறையிலிருந்தான நிதியிடலின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினாலும் சாத்தியமாயிற்று. உதாரணமாக வங்கியல்லாத்துறையில் திறைசேரி உண்டியல் வைத்திருத்தல் 1985 இறுதியின் ரூ. 16,590 இலட்சத்திலிருந்து 1986 இறுதியில் ரூ. 39,090 இலட்சமாக உயர் வடைந்தது. தேறிய அதிகரிப்பு ரூ. 22,500 இலட்சமாகும். மேலும் 1986பெப்புரு வரியில் ரூ. 17,790 இலட்சங்கொண்ட மத்திய வங்கியின் இலாபத்தின் மாற்றலும் அரசு வங்கித்தொழில்முறையிலிருந்தான அதன் கடன்பாடுகளைக் குறைப்பதற்கு உதவியது. எனவே 1986 இல் அரசு வங்கித்தொழில்முறையினை குறைந்தளவுக்கு நாடியமை தனியார்துறைக்கு கிடைத்திருக்கவேண்டிய நிதியங்கள் குறிப்பிடத் தக்களவுக்கு திசைதிருப்பப்பட்டமையாலேயே ஓரளவுக்கு சாத்தியப்படத்தக்க தாகவிருந்தது. இது விலை உறுதிப்பாட்டினைப் பேணுவதனை ஊக்குவிக்கின்ற அபிவிருத்தியொன்ருக விளங்கினுலும் தனியார்துறையில் சிலசமயம் பாதகமான விளைவுகளைக் கொண்டதாகவிருக்கலாம்.

அபிவிருத்தியின் நோக்கில் 1986 இல் கொடுகடன்துறையில் மிகவும் பாதக மான பண்புகளில் ஒன்ருக தனியார்துறையிலிருந்தான மிகவும்குறைவான கொடு கடன் கேள்வி விளங்கியது. ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் அரச கூட்டுத்தா பனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் ஏனைய தனியார்துறைக் கூறுகள் என்பவற்றை உள்ளடக்கும் தனியார்துறைக்கான மொத்தக்கொடுகடன் 1985 இன் ரூ. 35,070 இலட்சம் அல்லது 10 சதவீதம்கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 26,840 இலட்சம் அல்லது 7 சதவீதத்தால் உயர்வடைந்தது. தனியார்துறைக் கான மொத்தக் கொடுகடனின் அதிகரிப்பில் முதன்மைப்பங்கு (84 சதவீதம்) ஏனைய தனியார்துறைத்தொகுதிக்காக வழங்கப்பட்ட கொடுகடனின் விளைவான

தாகும். எனினும் இக்கொடுகடன்கள் 1985 இன் ரூ. 34,800 இலட்சம் அல்லது 12 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1986 இல் ரூ. 22,630 இலட்சத்தால் அல்லது 7 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தது.

1986 இல் தனியார்துறைக்கான மொத்தக் கொடுகடனின் 15 சதவீதத்திற்கு மட்டுமே வகைகூறிய இருதுணைத்துறைகளாக கூட்டுறவு நிறுவனங்களும், அரச கூட்டுத்தாபனங்களும் அவற்றின் வங்கிக்கொடுகடனைப் பயன்படுத்துவதில் சுறுசுறுப்பற்ற தன்மையைக் கொண்டிருந்தன. கூட்டுறவு நிறுவனங்களுக்கான கொடுகடன் 1985 இன் ரூ. 2,630 இலட்சம் அல்லது 17 சதவீதமான வீழ்ச்சிக்கு மாறாக 1986 இல் ரூ. 1,200 இலட்சத்தால் அல்லது 9 சதவீதத்தால் அதிகரித்தது. இது முக்கியமாக உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் நெல் கொள்வனவுகளுக்கான முற்பணங்களில் பிரதிபலிக்கப்பட்டது.

அரச கூட்டுத்தாபனங்களுக்கான வர்த்தக வங்கிக்கொடுகடன் 1985 இன் ரூ. 2,900 இலட்சம் அல்லது 7 சதவீதமான ஏறத்தாழ ஒரேயளவான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1986 இல் ரூ. 3,010 இலட்சத்தால் அல்லது 7 சதவீதத்தால் அதிகரித்தது. தேயிலை விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினுல் தோன்றிய திரவத்தன்மைக்கட்டுப்பாடுகளின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கும் வகையில் இரு அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களின் கடன்பாடுகள் இவ்வாண்டில் கணிசமாக அதிகரித்தது. 1986 இல் இவ்விரு கூட்டுத்தாபனங்களினதும் கொடுகடன் மட்டம் ரூ. 7,920 இலட்சத்தால் உயர்வடைந்தது. இதேவேளை ஏனைய கூட்டுத்தாபனங்கள் வங்கிக்கொடுகடன் மீதான தங்கள் தங்கியிருத்தலை இவ்வாண்டில் குறைத்துக்கொண்டன. இவற்றில் முக்கியமானவை தேசிய புடவைக்கூட்டுத்தாபனம் (ரூ. 1,450 இலட்சம்) கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் (ரூ. 710 இலட்சம்) இலங்கைச் சீமெந்துக்கூட்டுத்தாபனம் (ரூ. 1,400 இலட்சம்) நகர அபிவிருத்தி அதிகாரசபை (ரூ. 1,670 இலட்சம் ) என்பன விளங்கின.

1986 இல் வட்டி வீதங்களின் அசைவு கீழ்நோக்கிய திசையில் காணப்பட்டது. வட்டிவீதங்களின் வீழ்ச்சி ஏறத்தாழ எல்லா நிதி நிறுவனங்களிலும் பணச்சந்தைக் கருவிகளிலும் பிரதிபலிக்கப்பட்டது. வைப்புக்களை ஏற்றுக்கொள்ளும் நிறுவனங்களில் தேசிய சேமிப்பு வங்கி அதன் வைப்பு வீதங்களில் சிறு அளவிலான கீழ்நோக்கிய திருத்தங்களை மேற்கொண்டவேளையில் வர்த்தக வங்கிகளும் நிதிக் கூட்டுநிலையங்களும் குறிப்பிடத்தக்களவில் அவற்றின் வீதங்களைக் குறைத்துக் கொண்டன. வைப்பு வீதங்களின் குறைப்பு இந்நிறுவனங்களின் நிதியங்களின் செலவினைக் குறைவடையச்செய்து அவற்றின் கடன்வழங்கல் வீதங்களை குறைப்பதற்கும் இயலச்செய்தது.

கடன்வழங்கல் வீதங்களில் குறைப்புக்களை மேற்கொள்வதற்கு குறிப்பாக வர்த்தக வங்கிகள் நல்லநிலையில் இருந்தன. வைப்பு வீதங்களின் கீழ்நோக்கிய திருத்தத்தின்விளைவாக நிதியங்களின் செலவில் குறைவு ஏற்பட்டதைத்தவிர வங்கிகள் ஒதுக்குமுறைத் திட்டத்தின் கீழான சிறப்பு ஒதுக்குத் தேவைகள் புறக்கீடு செய்யப்பட்டமையால் நலன்களையும் அனுபவித்தன. எனினும் உண்மை நடைமுறையில் வர்த்தகவங்கிகளின் கடன்வழங்கல்வீதங்களின் வீழ்ச்சிகள் சிறிதளவிலானவையாக மட்டுமல்லாது முன்னுரிமைத்துறைகளிலான கடன் வழங்கல் வீதங்களுக்கே பெருமளவுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. வர்த்தக வங்கிகளின் கடன் வழங்கல் வீதங்களின் அசைவின் இக்கீழ் நோக்கிய போக்கு வங்கித்தொழில் துறையில் குறிப்பிடத்தக்க மேலதிகத்திரவத்தன்மை நிலவும் நிலைமையில் கவனத்

தில் எடுக்கப்படவேண்டியதொரு விடயமென்பதில் ஐயத்திற்கிடமில்லை. எனினும் நீண்டகாலக்கொடுகடன் நிறுனங்களின் கடன்வழங்கல் வீதங்களில் குறிப்பிடத் தக்க குறைப்புக்கள் அவதானிக்கப்பட்டன. அரசஈட்டு முதலீட்டு வங்கி அதன் எல்லாவகைக் கடன்களின் மீதான வட்டிவீதங்களை 2 சதவீதப்புள்ளிகளினுல் குறைத்த வேளையில் இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனமும் மீள்நிதி யிடல் திட்டங்களுக்கு புறம்பாக வழங்கப்பட்ட கடன் வீதங்களில் ஆண்டுக்கு 14 சதவீதத்திலிருந்து 21 சதவீதம் வரையான வீச்சில் இருந்து ஆண்டுக்கு 14 சதவீதத்திலிருந்து 18 சதவீதம் வரையான வீச்சிற்கு கீழ்நோக்கிய திருத்த மொன்றினை மேற்கொண்டது.

மீளாய்வின் கீழுள்ள ஆண்டின் குறுகியகால, நீண்டகால பணச்சந்தைக் கருவிகள் இரண்டின் மீதும் வழங்கப்பட்ட வட்டிவீதங்களிலும் குறைப்புக்கள் மேற் கொள்ளப்பட்டன. முதலாந்தரத்திறைசேரி உண்டியல்கள் மீதான வீதம் ஆண் டுக்கு 11.5 சதவீதத்திலிருந்து 1986 சனவரியிலிருந்து ஆண்டுக்கு 11 சதவீதமாக வீழ்ச்சியுற்றது. இக்குறைப்பின் தாக்கமானது வாங்கும், விற்கும் வீதங்கள் பல சந்தர்ப்பங்களில் வீழ்ச்சியுற்ற இரண்டாம்தரத் திறைசேரி உண்டியல் சந்தையின் தொழிற்பாடுகளில் உணரப்பட்டது. மத்தியவங்கிப் பிணைகள் மீதான நறுக்கு வீதமும் 1986 சனவரியில் ஆண்டுக்கு 14 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது. இதே மாதத்திலிருந்து அரச பிணைகள்மீதான வட்டிவீதம் ஆண்டுக்கு 14 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக வீழ்ச்சியுற்று முதிர்ச்சிக் காலம் ஆறு ஆண்டுகளாகவே மாற்றமின்றிக்காணப்பட்டது.

இவ்வாண்டில் நிகழ்ந்த வட்டிவீத மாற்றங்களின் தேறிய விளைவு வேறு பட்ட நிதி நிறுவனங்களால் வைப்புக்கள் மீது செலுத்தப்பட்ட வீதங்களுக்கும், திறைசேரிஉண்டியல்கள், மத்திய வங்கிப் பிணைகள் அரசபிணைகள் போன்ற பணச் சந்தைக் கருவிகள் மீது கிடைக்கத்தக்கதாகவிருந்த வீதங்களுக்குமிடையிலான இடைவெளியினை கணிசமானளவு குறைவடையச் செய்தமையாகும். இவ்வளவு வேறுபாடுகளைக் குறைத்தமையோடு வங்கி வைப்புக்களை வைத்திருத்தலைக் கவர்ச்சிக் குறைவானதாகச் செய்த இறைத்துறையின்மீது மேற்கொண்ட குறிப்பிட்ட சில வழிமுறைகளும் சேர்ந்ததால் நிதிக்கருவிகளிலான முதலீடுகள் குறிப்பாக அரசபத்தி ரங்களில், தனியார்துறையின் முதலீட்டுக்கான கவர்ச்சியுள்ள துறையாக விளங்கும் சூழ்நிலையொன்று உருவாக்கப்பட்டது. அதன்படி இலங்கை அரச திறைசேரி உண்டி யல்கள், மத்தியவங்கிப்பிணைகள் இரண்டிலும் வங்கியல்லாத்துறையால் கணிச மானளவு முதலீடுகள் செய்யப்பட்டமையால் இவ்வாண்டில் நிதிச்சந்தை புதிய அபிவிருத்தியொன்றினைக்கண்டது. உதாரணமாக 1986 திசெம்பர் இறுதியில் மொத்தமாக வெளிநிற்கும் திறைசேரி உண்டியல்களில் வங்கியல்லாத்துறை யின் மொத்த முதலீடு ரூ. 39,090 இலட்சமாக விளங்கி அந்த நாளில் வெளிநின்ற உண்டியல்களில் 14.9 சதவீதத்திற்கு வகைகூறியது. இது 1985 திசெம்பர் இறுதியில் காணப்பட்ட 7.4 சதவீத மொத்தப்பங்குடன் ஒப்பிடத்தக்கது.

1986 இல் மத்தியவங்கியின் நாணயக்கொள்கை 1984 இலிருந்து பின் பற்றப்பட்ட கட்டுப்பாடான நாணயக்கொள்கையின் விரிவான வலையமைப்பிற் குள் பொருளாதாரத்தில் உற்பத்தித்துறைகளை அபிவிருத்திசெய்வதனை நோக்க மாகக் கொண்டிருந்தது. பொருளாதாரத்தில் காணப்பட்ட மேலதிக திரவத்தன் மையை ஈர்ப்பதற்காக வங்கி அதன் சொந்தப்பிணைகளை வழங்குவதைத்தொடர் ந்தும் மேற்கொண்டவேளையில் முன்னுரிமைத் துறைகளுக்கு சலுகை வீதங்களில் கொடுகடன் கிடைத்தலை மேலும் விரிவாக்குவதற்காக சில குறிப்பிட்ட மீள்நிதி

யிடல் திட்டங்களின் கீழ் கிடைத்தத்தக்க வசதிகள் அதிகரிக்கப்பட்டன. அதே வேளையில் 1984 இன் முற்பகுதியில் விதிக்கப்பட்ட அளவுரீதியான கொடுகடன் கட்டுப்பாடுகளில் சில நாணயக்கொள்கைக்கு கூடுதலான சந்தை வசதிகளை வழங்கும் நோக்குடன் தளர்த்தப்பட்டன. பொருளாதாரத்தினை உற்பத்தித் துறையின் நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கைவழிமுறைகளில் மத்தியவங்கியின் மீள் நிதியிடல் வீதங்களின் குறைப்பு, குறிப்பிட்ட சில வசதிகளின் கீழ் கிடைக்கத்தக்கதாகவுள்ள மீள்நிதியிடலின் அளவினை அதிகரித்தல் மரபுவழி, மரபுவழியல்லா ஏற்றுமதிகளுக்கு கிடைக்கத் தக்கதான மீள்நிதியிடலுக்கான காலப்பகுதியை நீடித்தமை 1984 மேயின் கொடுகடன் மேலெல்லைகளிலிருந்து கைத்தொழில் நோக்கங்களுக்கான தனி யார்துறையினருக்கு வழங்கும் வர்த்தக வங்கிக் கொடுகடனுக்கு விலக்களிக்கப் பட்டமை, ஒதுக்குமுறையின்கீழ் சிறப்பு ஒதுக்குகளைப் பேணுவதற்கான தேவை புறக்கீடு செய்யப்பட்டமை என்பன விளங்கின. இறுதியாகக் குறிப்பிடப்பட்ட வழிமுறை வர்த்தகவங்கிகள் அவற்றின் கடன்வழங்கல் வீதங்களைக் குறைப்பதற் கான தூண்டுதலை நோக்கமாகக் கொண்டதாகும்.

முன்னுரிமைத்துறைகளுக்குக் கொடுகடன் பாய்ச்சல்களை வழிப்படுத்துவதற் கான தேவையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட தேசிய கொடுகடன் திட் டத்தின் நியதியில் மத்தியவங்கி பொருளாதாரத்தின் கொடுகடன் அபிவிருத்தி களை கண்காணிப்பதனை தொடர்ந்து மேற்கொண்டது. 1986 இல் கொடுகடன் துறையில் மிகவும் குறிப்பிடத்தக்க பண்பு யாதெனில் கொடுகடன் திட்ட மதிப் பீடுகளுடன் ஒப்பிடுகையில் கொடுகடன் பயன்பாடு குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையாகும். முன்னுரிமைத்துறைகளின் குறைவான கொடுகடன் பயன்பாட்டுக்கு பல காரணிகள் காணப்பட்டன. முதலாவது மரபுவழி ஏற்றுமதி விலைகளின் கடுமையான வீழ்ச்சி வர்த்தக நோக்கங்களுக்கான கொடுகடனின் கேள்வியினை பெயரளவிலான நியதியில் குறைத்ததாகும். இரண்டாவது அரசுக் குச் சொந்தமான பெருந்தோட்டத்துறைக்கான நடுத்தரகால முதலீட்டு நிகழ்ச் சித்திட்டத்தின் செயற்படுத்தலில் தாமதம் காணப்பட்டமையாகும். மூன்றாவது இவ்வாண்டில் குறிப்பிடப்பட்ட சில மாவட்டங்களில் நிலவிய பாதகமான காலநிலைமைகள் வேளாண்மைத்துறைகளிலிருந்தான கொடுகடனுக்கான கேள் வியினை பாதிப்படையச் செய்தமையாகும்.

பொதுவாகப் பொருளாதாரத்திலும் குறிப்பாக வங்கித்தொழில்முறையி லும் பேலதிகத் திரவத்தன்மை நிலவிய போதிலும் 1986 இல் மூலதனச் சந்தை யின் நடவடிக்கைகள் மிகவும் குறிப்பிடத்தக்கதாக அமையவில்லை. இவ்வாண்டில் ரூ. 1,300 இலட்சம் பெறுமதியான பங்குகளை வழங்கும் ஐந்து புதிய பங்கு வழங்கல்கள் காணப்பட்டன. இது 1985 இன் ரூ. 870 இலட்சங்கொண்ட மூன்று வழங்கல்களை வழங்கிய நிலைமையைவிட சிறிதளவு முன்னேற்றமானது, 1983 இலிருந்து புதியபங்கு வழங்கல்களில் படிப்படியான வீழ்ச்சி காணப்பட்டது, இதன் எண்ணிக்கை 1983 இல் 37 இலிருந்து 1984 இல் 13 ஆக வீழ்ச்சிய டைந்து 1985 இல் மேலும் 3 ஆக வீழ்ச்சியடைந்தது. தொடர்ந்துவரும் உள் நாட்டுக்குழப்பத்தினால் உருவாக்கப்பட்ட நிச்சயமற்ற வியாபாரத்தோற்றப்பாடு பங்குச்சந்தையின் நடவடிக்கைகளைப் பாதிப்படையச்செய்ததாகத் தோன்றுகின் றது.

1986 இல் பொருளாதார வளர்ச்சி உள்நாட்டு வெளிநாட்டுத்தடைகள் பலவற்றை எதிர்கொண்டது. உள்நாட்டில் வடக்கு, கிழக்கு பிரதேசங்களின் சில பகுதிகளில் காணப்பட்ட உள்நாட்டுக் குழப்பங்கள் வேளாண்மை, வர்த்தகம் மற்றும் ஏனைய பொருளாதார நடவடிக்கைகள் கடுமையாகவும் கூடியளவிலும் பின்னடைவைக் கொண்டிருந்தமையால் நாடு தற்போது அடைந்ததைவிட கூடியவேகத்தில் வளர்ச்சி அடைவதற்கான அதன் ஆற்றலைக்குறைந்தது. 1983 இன் இனக்குழப்பத்திஞல் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து சுற்றுலாத்துறை மீளவில்லை. வெளிநாட்டில் பண்டங்களின் செழிப்புத் தன்மையில் ஏற்பட்டவீழ்ச்சி ஏனைய துறைகளின்மீது எதிர்த்தாக்கங்களைக் கொண்டிருந்தது. இதஞல் 1978 இற்கும் 1985 இற்கும் இடையில் 5.6 சதவீதமான சராசரியைக் கொண்டிருந்த வளர்ச்சித் திறன் 1986 இல் 4.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பொருளாதாரத்தின் கணிசமான துறைகளின்மீது மிகப்பாதகமான தாக்கங்கள் காணப்பட்டபோதிலும் இவ்வளர்ச்சி வீதம் அடையப்பட்டமை குறிப்பிடத்தக்க தொன்ருகும்.

துறைவாரியான வளர்ச்சிச் செயலாற்றம் நெருங்கிய கவனங்கள் தேவைப்படும் வலியுறுத்தல்களையும் பாதிக்கப்படத்தக்க நிலைமைகளையும் எடுத்துக்காட்டுகின்றது. கூடியளவு உறுதிப்பாட்டினை அடைவதற்கு 1977 இன் பொருளாதார மீளமைப்பு வழிமுறைகளை வலியுறுத்தும் பொருளாதாரச் சீராக்க நிகழ்ச்சித் திட்டமானது பொருளாதார வளர்ச்சியின்மீது பாதகமானதும் உறுதிப்பாட்டைக் குலைக்கத்தக்கதுமான தவறுகளை எதிர்கொள்வதற்காக மீள வடிவமைக்கப்படவேண்டும். வளர்ச்சித்துறைகளில் உயர் மட்டப்பொருளாதார நடவடிக்கைகளை அடைவதுடன் தொடர்புள்ள உள்நாட்டுக்கொள்கைகள் பயன்பாட்டுக்காலத்தை உறுதிப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படவேண்டும். இறைக்கொள்கை ஒழுங்கற்றிருப்பின் சீராக்கச் சுமையை நாணயக் கொள்கைகள் மாத்திரம் தாங்கமுடியாது. நிதி, பொருளாதார சூழலைப் பலப்படுத்தல் நாட்டின் வரவு செலவுத்திட்டத்தின் பெருமளவு சமமின்மைகளைத் தடுப்பதற்குத் துணிவான கற்பனை நிறைந்த பொருத்தமாகவுள்ளதுமான வழி முறைகளை ஏற்றுக் கொள்ளவேண்டிய அவசியத்தை ஏற்படுத்துகின்றது.

நிதி, வரவு செலவுத்திட்ட ஒழுங்குமுறைகளை அடைவதற்கு கவனமாக ஒன்றிணைக்கப்பட்ட கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட உறுதியான முயற்சியொன்று பொருளாதார முகாமைத்துவத்தை முன்னேற்றுவதற்கு வேண்டப்படுகின்றது. கிடைக்கத்தக்கதாகவுள்ள மூலவளங்களும், பொருளாதாரத்தின் உட்கொள்ளும் கொள்ளளவும் மாறுதிருக்கும்போது அளவுக்கதிகமான வரவு செலவுத்திட்டப் பற்றுக்குறைகள் சேமிப்புகளை விகிதாசாரமற்ற ரீதியில் ஈர்த்தெடுத்து அதன்மூலம் தனியார்துறையினருக்கான மூலவளக் கிடைப்பனவைக் குறைக்குமாயின் பொருளாதார முகாமைத்துவம் நலிவுறும். தனியார்துறையின் முன்னேற்றம் ஆக்கபூர்வமான பதில்கள் எதுவுமின்றி பாதிப்படைவதனை நோக்கிச் செல்கிறது. வரவு செலவுத்திட்டப் பற்றுக்குறையினைக் கட்டுப்படுத்தல் இவ்வகைப் பற்றுக்குறைகள் சென்மதிநிலுவையின்மீது தவிர்க்கமுடியாத வகையில் பாதகமான தாக்கங்களைக் கொண்டுள்ளதால் எல்லாவற்றிலும் முக்கியமானதாகும். இலங்கையின் நடைமுறைப் பிரச்சனைகளின் சூழலில் பெருமளவு பற்றுக்குறைகளிலிருந்து விலகி பன்ஞட்டு ரீதியில் போட்டியுள்ளதாகவுள்ள பண்டங்கள், பணிகளின் உற்பத்தியில் சார்புரீதியான மூலவளபெயர்வு ஒன்றே தேவையாகவுள்ளது. பொருளாதார நடவடிக்கைகள் மித மானதாகவும் ஆற்றல் குறைவானதாகவும் விளங்கி நலிவுற்றபண்ட விலைகளினுலும்

பாதகமான வர்த்தகமாற்று விகிதத்தினுலும் மேலும் பாதிப்படைந்து இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை பாதிப்படையச் செய்த பாதகமான உலகப் பொருளாதாரச் சூழலில் பெருமளவு இறைப்பற்ருக்குறைகள், சென்மதி நிலுவை, செலாவணிவீதம், உள்நாட்டுவிலைகள் என்பனமீது மேலும் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் மட்டுமல்லாது அமைப்புரீதியான சீராக்கங்கள் செய்வதற்கான உடனடித்தேவையினைப் பின்தள்ளியது. இலங்கை அதன் பொருளாதார அமைப்பினைப் பன்முகப்படுத்துவதில் கணிசமான அளவை அடையமுடிந்தாலும் ஏற்றுமதிகளுக்கான கவனம் சில ஏற்றுமதி உற்பத்திப்பொருட்களில் மட்டும் காணப்பட்டமை சென்மதி நிலுவை நிலைமையை அதிகளவில் தொடர்ச்சியாக பாதிப்படையச்செய்த முக்கிய அமைப்பு ரீதியான பிரச்சனையாக விளங்கியது.

திறமையான, உண்மையான, எதிர்நோக்கத்தக்க தீர்வைகளுக்கான அதிகளவு கவனத்தைப் பெறவேண்டிய முன்னுரிமைத்துறைகளாக வெளிநாட்டுத்துறையும் அரச வரவு செலவுத்திட்டமும் வெளிப்படையாக விளங்கின. இவை ஒன்றுடன் ஒன்று முற்ருக வேறுபட்ட பகுதிகளாக இருக்கவேண்டிய கட்டாயம் இல்லை என்பதோடு உண்மையில் இவை ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புள்ளனவாகக் காணப்பட்டன. உண்மையில் சென்மதி நிலுவைப் பற்ருக்குறைகளும் விலைத்தாக்கமும் பணவீக்கமல்லா அடிப்படையில் பொருளாதாரம் எதிர்கொள்ளக்கூடியதைப் பார்க்கிலும் விரைவானமுறையில் உள்நாட்டுச் செலவினத்தின் மேலதிகமான வளர்ச்சிக்கான மாற்று பதில் வழிமுறைகளாக சென்மதி நிலுவைப்பற்ருக்குறைகளும் விலைத்தாக்கங்களும் விளங்குகின்றன. இறைத் தொழிற்பாட்டு முறைகள், சென்மதி நிலுவைகள் இரண்டிலுமுள்ள சில பலவீனங்கள் நிலையற்ற காரணிகளினுல் ஏற்பட்டவையாகும். உதாரணமாக அண்மைய ஆண்டுகளில் பாதுகாப்புடன் தொடர்புள்ள செலவினங்கள் அரச செலவினத்திலும் வெளிநாட்டு மூலவளங்களிலும் அதிகரிக்கும் பங்கினை ஈர்த்துவருகின்றது. ஆனுல் சிக்கல்களின் பெரும்பங்கு பொருளாதாரத்தின் மூலவள அடிப்படைக்கு கணிசமானளவுக்கு அப்பால் செலவினை அதிகரிப்பதற்கான முயற்சியொன்றிலிருந்து ஏற்பட்டதாகும். 1978-1986 காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அரசிறை 22.4 சதவீதமான சராசரியைக் கொண்டிருந்ததுடன் இது வரவு செலவுத்திட்டத்தின் அளவினைக் கருதும்போது மிகவும் திருப்திகரமான இறைத்தொழிற்பாட்டு முயற்சியாகவும் விளங்கியது. மறுபக்கத்தில் இக்காலப்பகுதியில் அரசின் மொத்தச் செலவினம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 39.6 சதவீதச் சராசரியைக் கொண்டிருந்தது. இதன் விளைவாக இக்காலப்பகுதியில் மொத்த வரவு செலவுத்திட்டப்பற்ருக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 17.2 சதவீத சராசரி மட்டத்தில் விளங்கியது. விரிவாக்கமற்ற மூலங்களிலிருந்து இவ்வளவு பெரும்பற்ருக்குறையை நிரப்புவதில் வெளிநாட்டுச் சேமிப்புக்களின் கணிசமானளவு உதவியிருந்தாலும்கூட நாட்டின் இயலளவுக்கு அப்பாற்பட்டதாகும். இவ் இறை மேலதிகங்களின் தேறிய விளைவு வரவு செலவுத்திட்ட பற்ருக்குறைகள் தொடர்ச்சியாக விரிவடைந்து காணப்படுவதாகும்.

தொடர்ந்து காணப்பட்டுவரும் பெருமளவு இறைப் பற்ருக்குறைகள் நாட்டின் பொருளாதார முகாமைத்துவத்தின் மீது தீர்க்கமான தாக்கத்தினை ஏற்படுத்தின, முதலில் விரிவாக்க வளங்களிலிருந்தான குறிப்பாக, வங்கிக் கொடுகடன் மூலமாக நிதியிடப்பட்ட மேலதிக இறைப்பற்ருக்குறைகள் பொருளாதாரத்தின் பொதுவான திரவத்தன்மையை உயர்மட்டத்தில் பேணியதுடன் விலைகள், சென்மதிநிலுவைகள் இரண்டின் மீதும் தாக்கத்தினை ஏற்படுத்தியது.

மேலதிகத்திரவத்தன்மை உருவாக்கத்தின் பாதகமான விளைவுகளைக் குறைப்பதற்கு நாணயக் கொள்கை ஓரளவுக்குக் கட்டுப்பாடான வழிமுறைகளை எடுக்க வேண்டியிருந்தது. சிலவேளைகளில் சில குறைந்த முன்னுரிமைத் துறைகளுக்கான கொடுகடனை நிலையாக வைத்திருக்கவேண்டியும் அதேவேளையில் தனியார்துறை முதலீட்டின் மட்டத்தின்மீது ஐயத்திற்கிடமின்றி பாதகமான விளைவுகளைக் கொண்டிருந்தாலும் வட்டிவீதங்களை சார்புரீதியில் உயர்மட்டங்களில் பேணவேண்டியும் இருந்தது.

மேலதிக இறைப்பற்றுக்குறைகளின் தாக்கமும் அதன் விளைவான திரவத் தன்மை உருவாக்கமும் 1977 இன் பின்னைய பெருமளவு காலப்பகுதியில் தாக்கத்திற்குட்பட்டதாக விளங்கிய சென்மதி நிலுவையின்மீது காணப்பட்டன. வெளிநாட்டுக் கொடுப்பனவுகளின் மீதான தொடர்ச்சியான பற்றுக்குறைகள் வெளிநாட்டுப் பொறுப்புக்களின் விரைவான திரட்சிக்கும் ஒதுக்குகளின் அடிக்கடியான இழப்புக்களுக்கும் வழிவகுத்தன. பாதிப்படைந்து செல்லும் வெளிநாட்டு நிலைமையின் தாக்கத்தின் கீழ் செலாவணி வீதம் இக்காலப்பகுதியில் பெறுமதித்தேய்வு அடைந்தது. 1977 நவெம்பரிலிருந்து 1986 திசெம்பர் வரையான ரூபாவின் ஒன்றுதிரண்ட பெறுமதித்தேய்வு ஐ.அ. டொலருக்கு எதிராக 44 சதவீதமாகவும், பவுண்ஸ்ரேலிங்குக்கு எதிராக 30 சதவீதமாகவும் டியூச்மார்க்குக்கெதிராக 52 சதவீதமாயும், யப்பானிய யென்னுக்கெதிராக 64 சதவீதமாகவும் விளங்கியது. இக்காலப்பகுதியில் ரூபா சிஎஉ வுக்கெதிராக 46 சதவீமாக தேய்வடைந்தது. ஏற்றுக்கொள்ளும் விதத்தில் ரூபாவின் பெறுமதித்தேய்வு பணவீக்கத்தின் மீதும் வருவாய்ப் பரம்பலின்மீதுமான விளைவுகளுடன் சேர்ந்து உயர்ந்து செல்லும் இறக்குமதி விலைகளை அதனுடன் கொண்டிருந்தது.

பலவகைப்பட்ட ஊக்குவிப்புக்களும் உறுதியான உள்நாட்டுக்கொள்கைகளும் காணப்பட்ட போதிலும் போதுமானளவு உள்நாட்டுச் சேமிப்புகளைத் திரட்டுவதற்கான பொருளாதாரத்தின் ஆற்றல் பெருமளவு வரவு செலவுத்திட்டப் பற்றுக்குறைகளாலும் வர்த்தகமாற்று வீதத்தில் காணப்பட்ட பாதகமான அசைவுகளினாலும் நிலையான சென்மதிநிலுவை பற்றுக்குறைகளினாலும் தடுக்கப்பட்டுள்ளது. எனினும் குறைந்த மட்டத்திலான உள்நாட்டுச் சேமிப்புக்களை நிரப்புவதற்கு வெளிநாட்டு மூலவளங்களின் உள்வருகை போதுமானதாகவிருந்தது. உயர்வான முதலீடு, தொழில்நுட்ப மாற்றல்கள் என்பவற்றினூடாக உயர்ந்த பொருளாதார வளர்ச்சிவீதத்தினை அடைவதற்கு வெளிநாட்டு மூலதனத்தின் முக்கியத்துவம் அதிகம் வலியுறுத்தப்படக்கூடாது. உலக பொருளாதாரத்தின் புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப சமாளித்துக் கொள்வதற்கும் உள்ளார்ந்த அபிவிருத்தி ஆற்றலை தூண்டுவதற்கும் வெளிநாட்டு மூலதனம் இலங்கையை அனுமதிக்லாம். இத்தகைய கடன்பாடுகள் உற்பத்தித்திறனுடைய முதலீடுகளுடன் இணைந்ததாகவும் படுகடன் பணிகளைச் செலுத்துவதற்கு இயலுமான விகிதாசாரமான அதிகரிப்பைக் கொண்டதாகவும் அமையாவிடின் நாட்டிலிருந்து உண்மையான மூலவளங்களின் தேறிய மாற்றல்களே காணப்படும். சீராக்கப்பட்ட கொள்கைகளினூடாக வளர்ச்சியினைப் பலப்படுத்தி பேணும் பொருட்டு சலுகை அடிப்படையிலான உதவியினதும் தொழில்நுட்ப மாற்றல்களினதும் பாய்ச்சல் அதிகரிக்கப்படவேண்டியதுடன் உற்பத்தித்திறனுடைய முதலீடுகளை நோக்கி வழிப்படுத்தப்படவும்வேண்டும்.

1978 இன் பின்னர் இலங்கை பெற்ற வெளிநாட்டு மூலதனத்தில் கணிச மானபங்கு சலுகை ரீதியில் பெறப்பட்டது. ஆனல் இதில் சிலபகுதி குறிப்பாக குறிப்பிட்ட சில அரசதுறைக்கூட்டுத்தாபனங்களினுல் மேற்கொள்ளப்பட்ட முத லீடுகள் தொடர்பானவை வர்த்தகரீதியில் பெறப்பட்டன. இதன் விளைவாக நடைமுறையில் உருவாக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களில் அதிகரித்துச் செல்லும் தொகையானது வெளிநாட்டு படுகடனைச் செலுத்து வதற்கு ஒதுக்கப்படவேண்டியுள்ளது. இதன்விளைவாக நாட்டின் வெளிநாட்டுப் படுகடன் பிரச்சனைக்கு ஒரு நல்ல வழிகாட்டியான சுட்டெண்ணுகக் கணிக்கப்படும் இலங்கையின் படுகடன் பணி விகிதாசாரம் உயர்ந்து செல்லும் போக்கினைப் பதிவுசெய்து படுகடனின் அதிகரித்துச் செல்லும் அளவினையும், பெரும்பாலும் அரசதுறைக்கூட்டுத்தாபனங்களின் கடன்பாடுகளுக்குப் பொருந்துவதான கடுமை யான வர்த்தக நியதிகளையும் பிரதிபலிப்பதாக உள்ளது. மொத்தப்படுகடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உயர்வான விகிதாசாரத்தினை அடைந்த போதிலும் அது இன்னும் நிருவகிக்கத்தக்க எல்லைக்குள் அமைந்துள்ளது. 1986 இல் பொருட்கள் பணிகளிலிருந்து கிடைத்த வருவாய்களின் விகிதாசாரமான படுகடன்பணிக்கொடுப்பனவுகள் (பன்னுட்டு நாணய நிதியத்திற்கான கொடுப் பனவுகள் உள்ளடங்கலாக ) 26.3 சதவீதமாக அமைந்தன. மொத்தப்படு கடன் பணிவிகிதம் அதாவது வணிக ஏற்றுமதிகள், பணிகள், தனியார் மாற்றல்களிலிருந்துமான பெறுகைகளின் விகிதமாக படுகடன் பணிக்கொடுப் பனவுகள், 21.9 சதவீதமாக விளங்கின. முதலீடுகளின் மீதான வருவாயின் உயர்வீதத்துடன் இசைவாகவுள்ள ஒழுங்கான பொருளாதார வளர்ச்சிக்கு போதுமான ஆதரவை வழங்குவதற்காக படுகடன் பணிச்சுமையினை குறைப்ப தற்கு இந்நிலைமையினை முன்னேற்றுவது அவசியமானதாகும். அரச. தனியார் துறைகள் இரண்டும் வெளியீட்டினை அதிகரிப்பதற்கு சரியான நேரத்தில் ஆக்கபூர் வமான நடவடிக்கையை எடுக்கவேண்டும். உறுதியைப்பாதிக்கும் காரணிகளின் குறைப்பினை நோக்கிய தொடர்ச்சியான பெயர்வொன்றினையும் உயர் பொரு ளாதார வளர்ச்சி வீதமொன்றினைப்பேணுவதனையும்உறுதிப்படுத்துவதற்குபொருத் தமானதும் போதுமானதாகவுமுள்ள கொள்கை வழிமுறைகளினூடாக உறுதி யான வெளிநாட்டு நிலைமையை பேணுதல் அவசியமானதாக காணப்படு கிறது. பொருளாதாரச் சூழ்நிலையிலேற்படும் மாற்றங்கள் வெளிநாட்டு மூலதனப் பாய்ச்சல்களுக்கான சாத்தியக்கூறுகள் குறிப்பாக சலுகைரீதியான விடயங்களி னுடையதைக் குறைவடையச் செய்தமையால் இது எல்லாவற்றிலும் முக்கிய மானதாகும். பன்னுட்டுத்துறையிலிருந்து இப்பாதகமான போக்குகளின் பாதகமான விளைவுகளிலிருந்து இலங்கை எவ்வாறு விலகிக்கொள்ளமுடியும் என்பதை எதிர்வுகூறுவது கடினமானதாகும்.

கடுமையான வெளிநாட்டு சூழலை எதிர்கொண்ட இலங்கையின் பொருளா தார வழிமுறைகள் கூடியளவில் குறைவடைந்து செல்வதாக தோன்றுகிறது. சேமிப்புக்களின் சிறியளவும் உள்நாட்டுச்சந்தையின் சிறு அளவும் மாருதிருக்கும் போது மூலதன ஆக்கத்தினை விரிவாக்குவதற்கு இலங்கை வெளிநாட்டுச் சேமிப்புக்

களின்மீது தங்கியிருப்பதை அவசியம் தொடரவேண்டும். மறுபுறத்தில் சரியான உள்நாட்டுக்கொள்கைகளை அது தொடரத் தவறினுல் வெளிநாட்டுச் சேமிப்புக்களின் பாய்ச்சல்களிலுள்ள நம்பிக்கை விரைவில் மறைந்துவிடும். இப்பிரச்சனையை எதிர்கொண்டு உடன்வரும் எதிர்காலத்தில் பொருளாதார கொள்கையின் வற்புறுத்தல்கள் பொருளாதார அடிப்படைகளை திருத்துவதனை நோக்கிச் செலுத்தப்படவேண்டும். இந்நோக்கத்திற்காக அதிகளவு இறைக்கட்டுப்பாடுகள் ஐயத்திற்கிடமின்றி அவசியமானதாகும். இது தொடர்பாக செய்முறைகள் ஏற்கனவே உள்ளதுடன் இவை பொருளாதாரத்தைப் பாதித்துவரும் முக்கிய சமமின்மைகளைத் திருத்துவதற்கு உதவக்கூடியனவாக விளங்கவேண்டும். 1987 இற்கான வரவு செலவுத்திட்டத்தை சமர்பிக்கும்போது பொருளாதாரத்தின் துறைரீதியிலான குறைபாடுகளைத் திருத்துவதற்கான வழிமுறைகளில் ஒரே தன்மை பேணப்படவேண்டியதன் அவசியத்தை அங்கீகரித்த நடுத்தரக்கால கொள்கை வலை அமைப்பினூடாக வரவு செலவுத்திட்டப் பற்றுக்குறையைக் குறைப்பதற்கான அதன் கடப்பாட்டினை அரசு மீள உறுதிப்படுத்தியது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நியதியின் மொத்த வரவுசெலவுத் திட்ட பற்றுக்குறை 1987 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 11 சதவீதத்திலிருந்து 1989 இல் 9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையுமென மதிப்பிடப்படுகின்றது. இது நிதிக்கட்டுப்பாடுகளை முன்னேற்றுவதிலும் கடப்பாடுகளின்மீது சிக்கனத்தை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட தொடர் வழிமுறைகளினூடாக அடையப்படவேண்டும். அரசு ஏற்கனவே எடுத்த நடவடிக்கைகளை தொடரவேண்டியுள்ளதோடு வரவு செலவுத்திட்ட சமநிலையை நோக்கி தொடர்ச்சியான அசைவினை உறுதிப்படுத்தும் மேலதிக மாற்றங்களையும் தேவையான வேளையில் அவசியம் மேற்கொள்ளவேண்டும். பன்னுட்டு உதவியுடனுன இப்படியான நடவடிக்கைகள் பொருளாதார முன்னேற்றத்தில் இலங்கையின் பெருமுயற்சிக்கு ஆதரவு கொடுக்கும் என நம்பலாம்.